937

Regd. No. M. 878.

தொகுதி 12. * பகுதி 3, 4.

1 - DEC 1921

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை,
நாகரீகம் இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

துன்மதி ௵ ஆடி – ஆவணி ௴
1921 ௵ ஜுலை – ஆகஸ்டு ௴

விஷயங்கள்.

1. முக்கிய அறிவிப்பு.	49
2. ஜனரல் காரியதரிசியின் அறிவிப்பு.	50
3. தற்காலநிலைமை.	53-96
4. பிரஹ்மஞான சபையும் அதினால் நான் அடைந்த பயனும் கே. எஸ். இராமசந்திரையர்.	57
5. அர்த்தவான் அல்லது மற்றொரு ஞானியின். சரித்திரம் எஸ் ஆர் அனந்தநாராயணய்யர்.	72
6. மோஹினிக் கதை—எஸ் முத்துஸாமி ஐயர்.	74
7. ஓர் புதுமை. ஷை	90
8. சமாசாரக் குறிப்பு.	93

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்.

தபால் சார்ஜ் உள்பட வருஷசந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

1921

பட்டங்களுடன் கூடிய கதைகள்.

சகிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —	ஐயர் பி. ஏ. பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை — மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள் — ஸ்ரீ தேவாபி மருகுருநாதா
ஹிந்து என்பவன் எவன் — தசாவதாரங்களின் உண்மை
காயத்திரி — எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம் — திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
சகோதரத்வம் — லோககுருவாகிய பரமன் வருவானேன்

நம் குழந்தைகளும் நம்தேசத்துக்கு வருங்கால மகிமையும்.
டில்லிமாநகரில் சக்ரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் இரண்டணா.

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியானபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். — சர்மார்க்கதீபம்
சத்குரு பாதங்களில். — சந்தியா வந்தனம்

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளகூடாது.
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள் (9) கர்மம்

(10) குழந்தைகளை பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்கமான விஷயங்கள்.

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

1-DEC 1921

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி	துன்மதிஞு ஆடி—ஆவணிமீ	பகுதி
12	1921ஞு ஜுலை—ஆகஸ்டுமீ	3, 4,

முக்கிய அறிவிப்பு.

இவ்வருஷம் பிரஹ்மஞானக் கன்வென்ஷன் காசியில் நடைபெறும். இந்த தினங்களில் என்று திட்டமாய் இன்னும் நிச்சயிக்கவில்லை. ஆனால் டிஸம்பர் 25-ம்தேதி முதல் 28வ வரை நடக்கும் என்று வைத்துக் கொள்ளலாம். பிரதிநிதிகள் முன்னாடியே தாங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் அப்படிப் பதிவு செய்வதற்கு நபர் 1-க்கு 2 ரூ. வீதம் முன் பணம் அனுப்பவேண்டும். இவ்வருஷம் ஏராளமான பிரதிநிதிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கன்வென்ஷனுக்கு யார் யார் வருகிறார்கள் என்று சீக்கிரத்தில் தெரிவிக்கும்படி அங்கத்தினர்களையும் லாட்ஜு காரியதரிசிகளையும் . இந்தியன் ஸெக்ஷன் ஜெனரல் காரியதரிசி கேட்டுக் கொள்ளுகிறார். காசிக் காண்டோன் மெண்டு ஸ்டேஷனில் டிசம்பர்மீ 23, 24-ம் தேதிகளில்

பிரதிநிதிகள் வரவேற்கப்படுவார்கள். டிசம்பர் 15உக்கு முன்னதாகவே கட்டணம் ரூ 2 ஐயும் கூடிய சீக்கிரத்தில் அனுப்பவேண்டும். அறை ஒன்றுக்கு 5ரூ அல்லது 10ரூ ஆக சில அறைகள் ஏற்பாடு செய்யலாம். முன் பணம் அனுப்பி அவைகளை அமர்த்திக் கொள்ளலாம். கட்டில்கள் வேண்டுமானல் கட்டில் ஒன்றுக்கு ரூ2 வீதம் தனிடாகக் கொடுத்தால் ஏற்பாடும் செய்யலாம். சாப்பாட்டுக்கு பிரதிநிதிகள் பணம் கொடுக்க வேண்டும். இந்தியச் சாப்பாட்டுக்கு இரண்டு வேளைக்கு ரூ 1 வீதம் சாப்பாட்டுச் சீட்டு விற்கப்படும் ஐரோப்பிய உணவு வேண்டுவோர் ஹோட்டல்களில் ஏற்படும் விகிதப்படி கொடுக்க வேண்டும். அப்படி ஐரோப்பிய உணவு வேண்டுவோர் காசியில் தியாஸபிகல் ஸொஸைடியில் மிஸ். எச். வீல் அம்மாளுக்கு முன்னடியே அறிவிக்க வேண்டும்.

***

அங்கத்தினர் வரும்போது படுக்கை, கொசுவலை, லாந்தர்கள், தண்ணீர் பாத்திரம் இவைகளைக் கொண்டுவரப் வேண்டும். மிகவும் ஜாஸ்தியாய்க் குளிருமாகையால் அதற்கேற்றபடி போர்வை முதலிய கொண்டுவரவேண்டும். வேண்டிய சௌகரியங்களைக் கடைகளிலும் வாங்கிக்கொள்ளலாம்.

ஜனரல் காரியதரிசிக்கு எழுதி இதைவிடவேண்டிய சங்கதிகளைத் தெரிந்து கொள்ளலாம்.

பூர்ணேந்துநாராயண ஸிம்ஹா

ஜனரல் காரியதரிசி

ஜனரல் காரியதரிசியின் அறிவிப்பு.

காசியில் ஆபீசில் இருக்கும் புஸ்தகங்களிலிருந்து அங்கத்தினர்கள் ஒரு பிசகான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று பொதுவாய்த் தெரியவருகிறது, வருஷச் சந்

தாவை வருஷ முடிவுக்குள் கட்டவேண்டும் என்று நினைப்ப தாகத் தெரியவருகிறது. அது அப்படியல்ல. இந்தியன் ஸெக்ஷன் அமைப்பின் படியும் விதிகளின்படியும் இக்கட்டணத்தை வருஷத் துவக்கத்திலேயே முன்பணமாகக் கட்டவேண்டும். அதாவது வருஷத்துவக்கமாகிய அக்டோபர்ஸீ த்திலேயே கட்டவேண்டும். மேற்கூறிய தப்பு அபிப்பிராயத்தினால் அங்கத்தினர்கள் வருஷ ஆகையரிலும் சிலர் அடுத்த ஹூ த்திலும் அனுப்புகிறார்கள். இது தவறாகும். இந்த விஷயத்தை அங்கத்தினர்களும் லாட்ஜு காரியதரிசிகளும் தயவு செய்து மனதிற்கொண்டால் மிகவும் நன்மையாகும்.

***

இன்னொரு தப்பு அபிப்பிராயம் என்னவென்றால், தியாஸபி இன் இந்தியா என்ற ஆங்கிலப்பத்திரிகையென்ன, தேசபாஷைகளில் வெளிவரும் மற்ற பிரம்மஞானப்பத்திரிகைகள் என்ன, இவைகளுக்குச் சந்தாவாக வருஷக்கட்டணத்தை நினைக்கிறார்கள். அநேக அங்கத்தினர் கட்டணத்தைக் கொடுக்காமல் பத்திரிகைகள் வரவேண்டும் என்று கேட்கிறார்கள். கட்டணமானது காசியிலிருக்கும் இந்தியன் ஸெக்ஷன் ஆபீஸ் நிர்வாகத்திற்கும் அடையாறிலிருக்கும் பிரஹ்மஞான சபையின் பிரதான ஸ்தலத்தின் நிர்வாகச் செலவுக்குமாக ஏற்பட்டது. அங்கத்தினர்களுக்கு இந்தியன் ஸெக்ஷனுடன் நெருக்கமான சம்பந்தம் ஏற்படுவதற்கும் சமாசாரம் தெரியப்படுத்துவதற்குமாக இனமாக ஆங்கில மாதாந்தரப் பத்திரிகையும் அதற்குப் பதிலாக அனுப்பப்படும் தேசபாஷைப் பத்திரிகைகளும் அனுப்பப்படுகின்றன. அனேகமாக இந்தியாவைத்தவிர மற்ற நாடுகளில், பத்திரிகைகளுக்காக தனிச் சந்தா வாங்கிக்கொண்டு பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. மேலும் வருஷாந்திரக் கட்டணத்திலிருந்து தேசபாஷைப் பத்திரிகைகளுக்கு உதவிப்பணம் அனுப்ப வேண்டும். இந்தியன் ஸெக்ஷனிலிருந்து லாட்ஜுகளுக்கு

லர் முதலிய கௌரவ உத்தியோகஸ்தர்களுக்குப் பிரயாணச்செலவும் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இதையெல்லாம் ஆலோசித்தால், கட்டணத்தை முன்பணமாய் அனுப்பாதபோனால் இந்தியன் ஸெக்ஷன் எவ்வளவு கஷ்டப்படும் என்று நேயர்கள் அறியலாம். இத்துடன் நிற்காமல், பத்திரிகைகளையும் பெற்றுக்கொண்டு கட்டணம் அனுப்பும்படி எழுதினால் பத்திரிகை வரவில்லையென்றும் அதனால் அனுப்பமுடியாதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். காலாகாலத்தில் தெரிவித்தால் பத்திரிகைகள் வரும்படி செய்யலாம். வருஷக்கடைசியில் சொல்வதால் அதுவும் முடியாமல் போகிறது. இன்னும் சிலர் 2, 3, வருஷங்களுக்குப் பத்திரிகைகளை வாங்கிக்கொண்டு கட்டணங்களைச் சுமரவிட்டுப் பிற்பாடு தாங்கள் சுமந்த சந்தாவைக் கொடுக்கமுடியவில்லையென்று கட்டணத்தை ரத்து செய்யும்படி கேட்கிறார்கள் ஆகையால் இந்த அசௌகரியங்கள் எல்லாவற்றையும் நீக்கும் பொருட்டு விதிகளின் பிரகாரம் வருஷ ஆரம்பமாகிற அக்டோபர்மீ 1உ முதல் இரண்டு மாதத்திற்குள்ளாகப் புதிய வருஷக் கட்டணத்தை அனுப்பவேண்டும். அப்படிக் கட்டணத்தை நேரிலாவது லாட்ஜு காரியதரிசிகள் மூலமாயாவது அனுப்பி விட்டால் சரி. நேரில் பணம் அனுப்பாமலும் லாட்ஜு காரியதரிசிகள் சந்தா வசூலாய் விட்டதாக எழுதாமலும் இருந்தால், அவர்கள் சந்தாவை வசூல் செய்ய வி. பி. மூலம் பத்திரிகை யனுப்பப்படும். அதிலும் வசூல் செய்யாமல் போனால் அவர்களுக்கு இனிமேல் பத்திரிகைகள் அனுப்ப முடியாது.

***

லாட்ஜு காரியதரிசிகள் வருஷக்கட்டணம் வசூல் செய்தனுப்பும் பொறுப்பை வகித்தவர்களாவார்கள். ஒரு அங்கத்தான் ஒரு லாட்ஜிலிருந்து மற்றொரு லாட்ஜுக்கு மாறும்போதும் லாட்ஜை விட்டு நீங்கும்போதும் முந்திய லாட்ஜு காரியதரிசி அவ்வங்கத்தானுடைய புதிய பூரா

விலாசத்துடன் அந்த அங்கத்தானின் பெயரை ஜனரல் காரியதரிசிக்கு எழுத வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவருக்குக் கடுதாசிகள் அனுப்ப இயலும். ஒவ்வொரு அங்கத்தானும்ஒரு லாட்ஜை விட்டு மாறும்போது அந்த லாட்ஜூக்குக் கொடுக்கவேண்டிய கட்டணங்களையும் இந்தியன் ஸெக்ஷனுக்குக் கொடுக்க வேண்டிய வருஷாந்திரக் கட்டணத்தையும் செலுத்தியாய் விட்டதென்று ஒரு விடுதலைச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும் அதைப் புதிதாகச்சேருகிற லாட்ஜூக் காரியதரிசியிடம்கொடுக்கவேண்டும். அப்படி இல்லாத போனுல்புதிய லாட்ஜூ காரியதரிசிக்கு அங்கத்தினருடைய பழய பாக்கிகள் ஒன்றும் தெரிய மாட்டாது. அந்த அங்கத்தினர் விஷயமாய் இந்தியன்ஸெக்‌ஷன் ஜனரல் காயதரிசிக்கு ஒரு லாட்ஜிலிருந்து மற்றொரு லாட்ஜூக்கு மாற்றவேண்டுமென்று அங்கதினராவது முந்திய லாட்ஜூ காரியதரிசியாவது எழுதக்கூடாது. எந்த லாட்ஜூக்கு அங்கத்தினர் மாற்றப்பட்டிருக்கிருரோ அவர் தான் எழுதவேண்டும். மற்றவர்கள் எழுதிஞல் கவனிக்கப்படமாட்டாது. ஒரு லாட்ஜில் சேரவேண்டுமாஞல் அந்த லாட்ஜூ இஷ்டப்பட்டால் தான் புதிதாய் ஒரு அங்கத்தினரை அதில் சேர்க்க முடியும்.

இதை யாவரும் நன்கு அறியவேண்டியது.

தற்கால நிலைமை.

பிராஹ்மணர் பிராஹ்மணால்லாதோர் என்று தற்காலத்தில் வழங்கி வரும் துவேஷக்கொள்கைகளை அகற்றி வைவஸ்வத மனுவானவர் தற்காலத்தில் நம்முடைய நாகரீகம் ஒழுக்கம் ஆசாரம் முதலியவைகளில் நடைபெற வேண்டுமென்று சூசிப்பிக்கின்ற மாறுதல்களைத் தாமதியாது ஏற்றுக் கொள்ளல் வேண்டும். அவ்விதம் செய்தால் மட்டும்,நாம் மனுவின் புத்திரர்கள் என்ற கௌரவப்பட்டத்தை

அடையத்தக்கவராவோம். முன்காலத்தில் மனுவானவர் பகிரங்கமாக ஜனங்கள் முன்னர்த் தோன்றி உபதேசம் செய்தார். அவ்வுபதேசங்களை ஜனங்கள் சிரஸின்மேல் வகித்துப் பூர்ண பக்தியுடன் அனுஷ்டித்து வந்தனர். மனு நீதி வழுவாமல் நடைபெறுதலே ஒரு ராஜ்ஜியத்தின் கௌரவமென்று நம்முடைய பூர்வ நூல்களில் பன்முறை கூறப்பட்டுள்ளது. இக்காலத்திலோ ஜனங்களுக்குள் அகங்காரத் தத்துவமானது விகஸித்து வெளித்தோன்றி அபிவிருத்தியை அடைந்திருக்கின்றபடியால் ஜிவன் முக்தர்களாகிய ரிஷிகளும் அதிகார புருஷர்களாகிய மனுவாதிகளும் ஜனங்கள் முன்பாகத் தோன்றினால் அவர்களை ஜனங்கள் மதியார்கள். அவர்களுடைய போதனைகளைத் திரஸ்கரிப்பார்கள். ஆகையால் அவர்கள் மறைவில் நின்று கொண்டு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மதம் நாகரீகம் ஆசாரம் ஒழுக்கம் முதலியவைகளில் ஏற்பட வேண்டிய மாறுதல்களை அவர்களுடைய கருத்தைத் தெரிந்த சிஷ்யர்கள் மூலமாயும், அவர்களுடைய நோக்கங்களை நிறைவேற்றும் நமது பிரஹ்மஞான சபை முதலிய கருவிகள் மூலமாயும், காலதர்மம் என்று யாதொரு பரிகாரமுமின்றித் தள்ளக்கூடாமல் அனுஷ்டிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துடன் அமைந்துள்ள மாறுதல்கள் மூலமாய் சூசிப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

***

மேற் சொல்லிய உண்மைகளை உதாரண மூலமாக நாம் தெரிந்து கொள்ளத்தக்கது. அரசியல் முன்காலத்தில் அரசனிடத்திலும் அவனுடைய மந்திரிகளிடத்திலும் பொருந்தி யிருந்தது. இக்காலத்திலோ அது பிரஜைகளிடத்தில் பொருந்தியுள்ளதாம். "டெமாக்ரஸி" Democracy என்ற ஜன நாயகமானது உலகத்தில் அனுஷ்டானத்திற்கு வந்து விட்டது. நமது தேசத்திலும் வந்து கொண்டிருக்கின்றது. இம்மாறுதல் காலதர்மத்தை அவ

ஸப்பித்த மாறுதலாகும் இம்மாறுதலைத் தள்ள நம்மால் முடியாது. இம்மாறுதலை உலகில் நேருப்படி செய்தல் ஈசுவர சங்கற்பத்தில் ஒன்றும். அதை அப்படி நிறை வேற்றும் அதிகாரம் மனு முதலிய பெரியோர்களைச் சார்ந்ததாகும்.

அ. அரங்கசாமி ஐயர்.

***

இந்தியாவில் ஸ்திரீகளின் நிலைமையானது வெகு விரைவாக மாறுதல்களை யடைந்து வருகின்றது. சென்னை சட்டசபையிலும் பம்பாய்ச் சட்ட சபையிலும் ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை கொடுக்கவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. இதன் பயனாக சட்டசபைகளுக்கு அடுத்த முறை பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் போது ஸ்திரீகளுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையானது கொடுக்கப்படும். இது இவ்விரண்டு மாகாணங்களில மட்டும் தான் நடைபெறும். மற்ற மாகாணங்களிலும் இதேமாதிரியான தீர்மானங்கள் நிறைவேறுமாயின் அம்மாதிரியான உரிமையானது அம்மாகாண ஸ்திரீகளுக்கும் கிடைக்கும். வங்காளச்சட்ட சபையில் இத்தீர்மானத்தை ப்பிரேரேபிக்க பெரும் பான்மையோரால் அந்த தீர்மானமானது நிராகரிக்கப்பட்டது. ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை கொடுப்பது அவர்களுக்கு தேசஸேவை செய்ய அவகாசம் கொடுப்பதே யொழிய வேறில்லை யென்றும், அதனால் பொது ஜனங்களுக்கும் தேசத்திற்கும் நன்மை யேற்படும் என்றும், புருஷர்களுக்குத் தோன்றும் யுக்திகளைக் காட்டிலும் ஸ்திரீகளுக்குக் கொஞ்சம் மாறுன யுக்திகள் தோன்றலாம் என்றும் இவ்விரண்டையும் சீர்தூக்கிச் செய்யும் சட்டத்திருத்தங்கள் தேசநன்மையைப் பயக்கும் என்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை யென்றும், தற்காலத்திய மேதாவிகள் துணிபாகும். ஆகையால் வங்காளத்தில் ஸ்திரீகளின் உரிமை மறுப்பைப்பற்றி அவர்கள் வருந்துவார்கள், மகம்மதிய அங்கத்தினர்களில் பெரும்

பான்மையோரும் ஹிந்துக்களில் சிலரும், ஆங்கில அங்கத்தினரில் சிலரும் இசதி மானத்தை ஆக்ஷேபித்ததால் தான் இத்தீர்மானம் பங்காளத்தில் தள்ளுபடியான தென்றும் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். ஆனால் கூடிய சீக்கிரத்தில் இவ்விபரீதமான முடிவை மாற்றி ஸ்திரீகளுக்கு இவ்வுரிமை கிடைக்கும்படி வங்காளத்திலும் சட்டசபையங்கத்தினர் தீர்மானிப்பார்கள் என்று நம்புகிறோம்.

***

அல்லஹபாத் அல்லது பிரயாகையில் இருக்கும் ஹைகோர்ட்டில் மிஸ் கர்னீலியா ஸொராப்ஜி என்ற ஒரு இந்தியப் பெண்மணியை ஹைகோர்ட்டு வக்கீலாக நியமித்திருக்கிறார்களாம். இப்பெண்மணி வெகு காலத்திற்கு முன்னாலேயே பி. ஏ. பி. எல். பரீக்ஷைகள் தேறி பட்டம் பெற்றிருந்தாள். வங்காளத்தில் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆபீஸில் கோஷா ஸ்திரீகளிடம் சட்ட விஷயமாயும் மற்ற விஷயமாயும் பேசவும், அபிப்பிராயம் கொடுக்கவும் ஒரு உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டிருந்தாள். இப்போது தான் ஹைகோர்ட்டு வக்கீலாக நியமிக்கப்பட்டிருக்கின்றனள். முதல் முதல் ஸ்திரீ ஹைகோர்ட் வக்கீலாய் நியமிக்கப்பட்டவர் இம்மாதே.

***

ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை கொடுத்தால் பயன் என்னவென்று நேயர்களில் ஒரு சிலர் கேட்கலாம். இந்தியாவில் ஆண்மக்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகை மிகவும் சுவல்பம். அதனினும் அவர்களின் சங்கையினும் ஸ்திரீகளில் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை பத்தில் ஒருபாக மாயிருக்கின்றது. இது விசனிக்கத்தகுந்த விஷயமல்லவா? ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை கொடுத்தால் ஸ்திரீகளுக்குள் படிப்பை விருத்திசெய்யவும் அவர்களுக்கென்று பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஸ்தாபிக்க வேண்டிய முயற்சிசெய்ய வாக்களிப்பவர்களையே பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுப்பார்கள் அல்லவா? ஆகையால் இவ்

96-ம் பக்கம் பார்க்க.

பிரஹ்மஞானசபையும் அதினால் நான் அடைந்த பயனும்.

சகோதரர்களே, சிநேகிதர்களே கனவான்களே! இங்கிலீஷில் தியசாபிகல் ஸொஸைடி என்று அழைக்கப்பட்டு வரும் சபை அல்லது சங்கத்துக்குத் தமிழில் பிரஹ்மஞான சபையென்று பெயர். தியாஸபி என்றால் ஈசுவர விஷயமான அறிவு அல்லது ஞானம் என்று பொருள். எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஏற்படுமோ அதை உபதேசிக்கவேண்டுமென்று சிஷ்யன் ஒருவன் தன்னுடைய குருவை கேட்க அவர் பிரஹ்மஞானத்தை உபதேசித்தார் என்று உபநிஷத்து ஒன்றில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் அதைப்பற்றிச் சொல்லும் சபையைக் குறித்து நாம் விசாரிக்கவேண்டிய தவசியமல்லவா?

ஈசுவரனானவர் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து அதை ஆட்சி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யாமல் விட்டுவிடவில்லையென்பதை ஈசுவரனிடத்தில் பக்தி செய்யும் ஒவ்வொருவரும் அறிவார்கள். பூலோகத்தில் எவ்விதம் சக்ரவர்த்தி முதல் மந்திரிகள் ராஜப்பிரதிநிதிகள் ஆகிய பல உத்தியோகஸ்தர்கள் பலபடிகளிலிருந்து கொண்டு ராஜாங்கத்தை நடத்தி வருகிறார்களோ அவ்விதமே ஸ்தூல உலகமுள்பட சூக்ஷ்ம உலகங்களிலும் பல அந்தஸ்துள்ள தேவர்கள், ரிஷிகள் முதலானவர்களிருந்து ஈசுவரனுடைய ஆஜ்ஞையை நிறைவேற்றி வருகிறார்கள். ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தேவன் அல்லது பக்குவமடைந்த ரிஷி அதிகாரியாகவிருந்து ஸ்தூல உலக ராஜாக்கள் மூலமாய் நடவடிக்கை நடத்திவருகிறார்கள் என்று மூதறிஞர் கூறுகின்றனர்.

மேற்கூறப்பட்ட தேவர்களும், ரிஷிகளும், வெளிப் படையாகத் தோன்ருவிடினும் ராஜாக்கள் அவர்களது மந்திரிகள் முதலானவர் மனதில் காலத்திற்கேற்றவாறு எண்ணங்கள் ஜனிக்கும் வண்ணம் செய்து வருகிருர்கள். மேற்கூறப்பட்ட ரிஷிகள் வருஷத்திற்கொரு முறை கூடி உலக வியவகாரங்களைப்பற்றி யோசித்துக் காலத்திற்கும் மனிதர்களுடைய பக்குவத்திற்கும் ஏற்றபடி ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள். இதைப்பற்றி நம்முடைய புராணங் களில் வியக்தமாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

ஏழாவது யெட்வர்ட் சக்ரவர்த்தியானவர் உலக அரசர்களுக்குள் யுத்தம் ஏற்படாமல் சமாதானமே எக் காலத்திலும் நிகழவேண்டுமென்று எவ்வளவோ பிரயத் தனங்கள் செய்தும் அவர் மரித்த பின்னர் அவருடைய குமாரர் காலத்தில் அவருக்கும் மற்ற ஐரோப்பிய அரசர் க்கும் பெரும் யுத்தம் நடந்தது நாமெல்லோரும் அறிந்த விஷயமே. இந்த யுத்தத்தின் பயனு : ஒரு சிலருக்காவது உலகப்பொருள்களில் மயக்கம் குறைந்திருக்கிறதல்லவா? ஈசுவரன் ஒருவரிருக்கிருர் என்ற நினைவும், எல்லோரும் ஈசு வரன் பிள்ளைகளானதால் ஜனங்களுக்குள் ஸகோதரத்துவ மும் சுதந்தரத்துவமும் ஐகமத்யமும் ஏற்படவேணுமென்ற எண்ணம் பல தேசத்தார்களுக்குள்ளும் ராஜாங்கத்தார் களுக்குள்ளும் உதித்திருப்பதைப் பத்திரிகைகளைப் படிப்ப வர்கள் யாவரும் அறிவார்கள். இவ்வித எண்ணங்கள் ஏக காலத்தில் பொதுவாக ஜனங்களுக்குள் பரவவேணு மென்ருல் இந்த மகாயுத்தமன்னியில் வேறு எவ்வித உபா யங்களாலும் முடியாதென்று நானும் கூறவேண்டுமோ? இந்த யுத்தமே மேற்கூறிய ரிஷிகள் தேவர்கள் இவர்களு டைய ஏற்பாட்டின் பேரில் நடந்ததென்றே கூறலாம். இதற்கு அத்தாட்சி குருக்ஷேத்திரத்தில் நிகழ்ந்த பாரத யுத்தமே.

கலியுகத்தில் தர்மம் குறைந்தும் அதர்மம் மேலிட்டும் வரும் என்று நம்முடைய புராணங்களில் கண்டிருக்கிறது. இந்தக் கலியில் ஜனங்கள் அதிகமாய்க் கெட்டுப்போகாமல் அவர்களைக் கூடுமானவரை தர்மத்தில் நிலைநிறுத்த வேண்டிய தவசியமென்றும் உணர்ந்து உலகத்தாருக்குக் கைங்கர்யம் செய்வதே தங்களின் தொழில் என்று நினைத்து உழைத்து வரும் ரிஷிகள் பலர் முன்போலவே இப்பொழுதும் இருக்கிறார்களென்பதற்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் அவர்கள் சாதாரணமாய் ஜனங்களுக்குள் வந்து தோன்றாமலிருக்கிறார்கள். அப்படி இருப்பானேன் என்று பலர் கேட்கிறார்கள். ஏனெனில், இப்பொழுது இருக்கும் ஜனங்களுக்குப் பொதுவாக உலகப்பொருள்களிலும் உலக அனுபவங்களிலும் மிகுந்த ஆசை இருக்கிறதென்ற விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அனைவரும் அறிந்ததே. துவாபர யுக அந்தியத்தில், கலியுகம் தொடங்குவதற்குச் சற்று முன், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவதரித்த போது அவரை யதார்த்தமாக அறிந்தவர் மிகச்சிலரே. அவரென்ன, வேதவியாசர் முதலிய ரிஷிகளென்ன, இவர்கள் துர்யோதனன் முதலியோர்களுக்கு எவ்வளவோ நற்போதனை செய்தும் அவர்கள் அதைக்கேட்காமல் அவமதித்துப் பெரிய பாரதயுத்தத்தை உண்டாக்கி விட்டார்கள். இப்பொழுது ஐரோப்பாவில் நடந்த சண்டையும், பொருளாசை, மற்ற இவ்வுலகவனுபவ ஆசை இவைகளினால், ஏற்பட்டதே. ஆகையால் அவ்விருஷிகள் வெளிப்படையாக வந்தால் உலக ஜனங்கள் அவர்களை யறிந்து அவர்கள் போதனைகளைக் கேட்டு நடப்பார்கள் என்பதற்கு இடமில்லை. ஆகையால் அவர் பஹிரங்கமாக வெளிக்கு வாராமல் மறைவாகவிருந்து தங்களுக்கு நம்பிக்கையுள்ள சிஷ்யர்கள் மூலமாய் வேண்டிய உபகாரங்களைச் செய்து வருகிறார்களென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

பிரஹ்மஞானசபையின் ஸ்தாபனம்

இப்பொழுது கலியுகம் பிறந்து 5022 வருஷமாகிறது. ஐயாயிரப் பிறட்டு வந்து விட்டது என்று ஜனங்கள் சொல்லும் காலமும் இதுவே. ஆகையால் இக்காலத்தில் ஜனங்களைக் கூடுமானவரை சரியான மார்க்கத்தில் நடத்தி வரவேண்டியது உலக பாரத்தை வகித்துவரும் ரிஷிகள் கடமையன்றோ? அந்தக் கடமையை யுணர்ந்த ரிஷிகள் இருவர்கள் மற்ற ரிஷிகளிடம் அனுமதி பெற்று ஒரு சபை மூலமாக உலகத்தாருக்கு நற்போதனை செய்துவர நினைத்து இந்த சபையை ஏற்படுத்தியிருப்பதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். அந்த ரிஷிகள் இருவரும் நம்முடைய பாகவத புராணத்திற் கண்ட மரு, தேவாபி என்று கூறப்பட்டவர்களே. இவர்களில் ஒருவர் சூரிய வம்சத்தையும் மற்றவர் சந்திர வம்சத்தையும்சேர்ந்தவர். இவர்கள் தங்கள் யோகமகிமையால் இன்னும் ஸ்தூல சரீரத்தையே வகித்து வருகிறார்கள். அமெரிக்காக் கண்டத்தில் ஐக்ய நாட்டில் பிறந்து மேற்படி தேசத்தில் மிக்க ஊக்கத்துடன் உழைத்து வந்து அநேக சீர்திருத்தங்களை அத்தேசாநுவத்திற் செய்தவரான கர்னல் ஆல்காட் என்பவர் என்ன, ருஷியாதேசத்தில் சக்ரவர்த்தி வம்சத்திற்கு நெருங்கிய குடும்பத்தில் பிறந்தவரும், பிறந்தது முதற்கொண்டே உலகப் பற்றைத் துறந்தவரும் தத்துவ விசாரணையில் பிரியமுள்ளவருமான ஸ்ரீமதி பிளவாட்ஸ்கி அம்மாள் என்ன, இவர்கள் இரண்டு பேரையும் நியூயார்க் என்னும் பட்டணத்தில் அந்த ரிஷிகள் சந்திக்கும்படி செய்தார்கள். இந்த பிஹ்மஞான சபையானது அவ்விருவர்களாலும் அந்த ரிஷிகள் உத்திரவுப்படி 1875ம் வருஷம் நவம்பர்மீ 17ம் தேதியில் ஸ்தாபிக்கப்பட்டது. அவ்விடத்தில் அச்சபையானது நான்கு வருஷம் வரை நடந்து வந்த பிற்பாடு, 1879ம் வருஷத்தில் நியூயார்க்கை விட்டுப் புறப்பட்டுப் பம்பாய் வந்து சேர்ந்தார்கள். 1881ம் வருஷம் வாக்கில் அடையாரில் இச்சங்கம் ஸ்திரமாக ஸ்தா

பனஞ் செய்யப்பட்டது. 1875 வருஷத்தில் மேற்கூறிய சபை முதல் முதலில் ஏற்படுவதற்கு முன் கர்னல் ஆல்காட் என்பவரிடம் இவ்விரு ரிஷிகளில் ஒருவர் நேரில் ஸ்தூல சரீரத்துடன் தோன்றி இதைப்பற்றி பேசியதில் அந்த ரிஷியைநம்பாமல் அவர் இந்தியாவிலிருந்து வந்தவர் என்று காட்டுவதற்கு அடையாளமாக ஏதாவது இந்திய தேசத்து ஸ்தூலப்பொருளைக் காட்டவேண்டும் என்று சொன்னதின் பேரில், அவருக்கு ஒரு பட்டுத் தலைக் குட்டையை அந்த ரிஷி கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அதானது நாளிது வரையில் அழியமால் நல்ல ஸ்திதியில் போற்றிவைக்கப் பட்டிருக்கிறது. அபேக்ஷையுள்ளவர் அடையாரில் பார்க்கலாம். பிளவாட்ஸ்கி அம்மாள் தன் பிறப்பிடமாகிய ருஷியாவை விட்டுத்தேச சஞ்சாரமாய்ப் புறப்பட்டு இந்தியாவில் அநேக பரிசுத்த ஸ்தலங்களையும் குஹைகளையும் பார்த்தும் ஹிமயமலையைத் தாண்டி, பால்யமுதல் அவ்வம்மைக்குத் தோன்றிக்கொண்டு வந்த ரிஷியைக்கண்டு உபதேசம் பெற்று, தன் தேசம் சென்று, அப்பால் நியூயார்க்குக்குப் போய் கர்னல் ஆல்காட்டைச் சந்தித்ததாகவும் தெரிய வருகிறது. பூர்வ ஜன்மங்களில் செய்த பூஜாபலத்தினாலும் அவர்களுக்கும் இந்த ரிஷிகளுக்கும் முன்ஜன்மங்களில் ஏற்பட்ட ஸம்பந்தத்தினாலும் இப்பிறப்பில் அவர்களது மனப்பக்குவநிலைமை, திறமை, நல்லொழுக்கம் இவைகளினாலும் இப்பெரிய உலககாரியத்தை வகித்து நடத்தத் தகுந்தவர்களென்று தெரிந்தெடுக்கப் பட்டார்களென்று கொள்ளலாம். அவர்கள் முதல் முதலில் பம்பாய்க்கு வந்த காலத்தில் அமெரிக்கா ருஷியா இந்த தேசங்களின் இராஜாங்க ஒற்றர்கள் என்று ஸந்தேகிக்கப்பட்டார்கள். அதின்பேரில் இங்கிலீஷ் ராஜாங்கத்தார் அவர்களுடைய தேசங்களின் ராஜாங்கத்திற்கு எழுதி ஸந்தேகங்களை நிவர்த்தித்துக்கொண்டார்கள். இந்த சங்கம் ஸ்தாபனமாகும் காலத்தில் உலகத்தில் ஆத்மதத்வ விசாரணை குறைந்து ஐம்புலன் கட்குப் புலனாகும் விஷயங்கள் தான் உண்மை யென்ற கொள்கை பரவி

வந்ததில் அதை ஒருவாறு மாற்றி ஆத்மதத்துவத்தில் விசேஷகவனமும் அதற்கடுத்தபடியாக கேவலம் உலகப்பொருட் சேர்க்கையில் கவனமும் உண்டாகவேண்டுமென்று ஜனங்களுக்கு இச்சபையாரால் போதிக்கப்பட்டுவந்தது. ஈசுவரன் ஸர்வவியாபி என்றும், அவர் இல்லாத இடமே இடையாதென்றும் எல்லா மதங்களும் அவரையடைய பற்பல மார்க்கங்கள் என்றும், அவரின்றி ஒன்றும் அசையாதென்றும், எக்கார்யத்தையையும் அவர் கார்யமாகச் செய்து வரவேண்டுமென்றும், அவரவர் பிறந்த மதத்திலேயே இருந்து வரலாமென்றும், அதுவே அவரது பக்குவத்திற்குத் தகுந்ததென்றும், வேறு மதத்துக்கு மாறவேண்டிய தவசியமில்லையென்றும், உலகத்தின்கண் மனிதவர்க்கத்துள் பலவகைகளில் ஏற்பட்டிருக்கும், உயர்வு தாழ்வான வித்தியாசங்களுக்கு அவரவர்கள் முன் ஜன்மத்தில் செய்த காரியங்களே காரணமென்றும், இச்சபைத்தலைவர் மிகத்தெளிவாய் ஜனங்களுக்கு எடுத்துப் போதித்தனர். கர்மம், புனர்ஜன்மம் என்ற இரண்டு கோட்பாடுகளை மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற மதஸ்தர்கள் மறந்து போயிருந்ததில் அவர்களுக்காக ஏற்பட்டிருக்கிற வேத புஸ்தகங்களிலிருந்து இக்கோட்பாடுகளைக் காட்டக்கூடிய வாக்யங்களை எடுத்து ஸங்கோச மின்னியில் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தச் சபையானது சாதாரண மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டது மல்ல. ஒரு தேசம் அல்லது ஒருமதத்துக்காகவாவது ஒரு சபையாருக்காகவாவது ஏற்படுத்தப்பட்டது மல்ல. பொதுவாக உலகஜனங்களை விகாசமுறையில் உர்யத்துவதற்காக ஏற்பட்ட ஸபை இது. இதினுடைய நோக்கங்கள் மூன்றாகும். அவையாவன, (1) ஸகோதரத்வம் (2) ஸர்வமதங்களையும் ஒப்பிட்டு ஆராய்தல் (3) குப்தமான இயற்கை விதிகளை ஆராய்தல். இக்கொள்கைகள் எல்லா மதஸ்தர்களுக்கும், ஜாதியார்களும் தேசத்தார்களுக்கும்

பொதுவானவைகள். ஆகையால் இந்தச் சபையில் பலமதஸ்தர்களும் பலஜாதியார்களும் பலதேசத்தார்களும் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இச்சபையின் கொள்கைகளுக்கு விரோதமின்றி அங்கத்தினர்கள் அவரவர்கள் புத்திவிலாசம், மனப்பக்குவம், அநுபவம், ஒழுக்கம் இவைகளுக்குத் தக்கவாறு, ஜனங்களின் அபிவிருத்தியை உத்தேசித்துப் பல வழிகளில் உழைத்துவர சுதந்திரமுண்டு. இச்சபையில் சேர்ந்த பிரமுகர்கள் அவ்வண்ணமே செய்து வருகிறார்கள். சுயநலமின்றி பிறர் உதவியின் பொருட்டுச் செய்யும் எக்காரியமும் ஈசுவரன் கைங்கர்யமேயாகும். ஒவ்வொருவரும் அவருக்கு ஏற்பட்ட கடமையை ஈசுவரார்ப்பணமாகச் செய்து வரவேண்டுமென்று தான் பகவத்கீதையில் உபதேசிக்கப் பட்டிருக்கிறது. அந்த பகவத்கீதையானது இந்தச்சபையின் பல அங்கத்தினர்களால் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டுப் பல தேசத்தார்களால் வாசிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் துவிஜர்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கிற சந்தியாவந்தனத்திலும் ஈசுவரன் ஸர்வவியாபி என்றும் ஈசுவரனும் மனிதனும் ஒரே தன்மையுடையவர்களென்றும் இகத்துக்கும், பரத்துக்கும் கெடுதலை விளைவிக்கக்கூடிய கோபம் ஆசை இவைகளை ஒவ்வொருவரும் ஒழிக்கவேண்டுமென்றும், எவனெவன் எந்தெந்த மூர்த்தியைப் பஜித்தாலும் எல்லாப் பஜனமும் ஸர்வேசுவரனையே போய் அடைகிறதென்றும் ஒவ்வொருவனும் மனசு, வாக்கு, காயம், இவைகளினால் செய்யும் எக்காரியத்தையும் ஈசுவரகைங்கர்யமாகப் பாவித்துச்செய்ய வேண்டுமென்றும், பொருள் கொடுக்கக்கூடிய மந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளை அநுசரித்தால் தான், பிரஹ்மஞான சபையின் முதற் கொள்கையான ஸகோதரத்துவம் ஏற்படுமென்பதை நானும சொல்லவேண்டுமோ? இதைத் தான் பிரஹ்ஞான சபையால் வெளியிடப்பட்டிருக்கும் பல புஸ்தகங்களில் பல உபமான உபமேயங்களுடன் தெளிவாய் எடுத்துரைக்கப்

பட்டிருக்கிறது. நவீன பௌதிக சாஸ்திரத்திற்கும் மதங்களின் அஸ்திவாரமான கொள்கைகளுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லையென்று இச்சபையின் முக்கியஸ்தர்களால் புஸ்தகங்களின் மூலமாய் வெளியிடப்பட்டிருக்கின்றது. இன்னும் பல விஷயங்களைப்பற்றியும் பல புஸ்தகங்கள், எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றிலும் ஈசுவரனைப்பற்றிக் கொஞ்சமாகிலும் சொல்லப்படாமலிருக்காது. இந்தியாவில் இந்த பிரஹ்மஞான சபையானது ஸ்திரப்படக்காரணம் யாதென்று ஒரு கேள்வி உதிக்கலாம். எகிப்து தேசத்தாரின் நாகரீகம் என்ன, பாபிலோன் தேசத்தாரின் நாகரீகம் என்ன, ரோமாபுரியின் நாகரீகம் என்ன, இவைகளெல்லாம் இருந்த இடமே தெரியாமல் அழிந்துபோயிருக்க, இந்திய நாகரீகத்தின் முக்கிய பாகம் இன்னும் இருந்து கொண்டே வருகிறது. இந்திய ரிஷிகளால் வெளியிடப்பட்ட உபநிஷத்துக்கள் வேதங்கள் இவைகளில் அடங்கியிருக்கிற உயர்ந்த தத்துவங்கள் எந்த தேசத்தாரால் வெளியிடப் பட்டிருக்கின்றன? இந்தியாவின் நாகரீகம் இன்னும் அழியாமலிருப்பதைப்பற்றி ஸ்ரீமான் ஸி. எப். ஆண்ட்ருஸ் என்பவர் 1920ஸ்ரீ அக்டோபர்மீ 10உ அன்று பீஹாரில் பள்ளிப்பிள்ளைகளின் சங்கத்தில் செய்திருக்கும் உபந்நியாசம் கவனிக்கத்தக்கது. இந்தியா நாகரீகமுற்றதா? என்று நாமம் புனைந்து ஸர்ஜான் உட்ராப் என்பவர் எழுதியிருக்கும் புஸ்தகத்தை படிக்கவேண்டியது அவசியம். இந்தியாதேசமானது மற்ற தேசத்தாருக்கு ஆத்மார்த்தக் கல்வி கற்பிப்பதற்காக இதுவரை காப்பற்றப் பட்டிருக்கிறது என்பது அறிஞர்கள் கொள்கை. ஆத்மார்த்த ஞானம் அற்றநாகரீகம் நிலைத்திருக்கக்கூடியதல்ல. இதையே லாம்பெத் என்னும் இங்கிலாந்தின் ஓர் ஸ்தலத்தில் நடந்த கிருஸ்தவர்கள் கான்பரன்ஸின் (கூட்டத்தின்) முடிவில் இங்கிலாந்து தேசத்து அத்யக்ஷ குருவானவர் கிருஸ்துவர்களுக்குள்ளும் கிருஸ்து மதத்தைச்சேராத மற்ற மதஸ்தர்களுக்குள்ளும் நல்லெண்ணமுள்ள புருஷர், ஸ்திரீகள் இவர்களுக்கு தெரிவித்தது யாதெனில் "வேறுபடுத்தும் சக்திகளால்

பூராடலகமும் கொழுக்கப்பட்டிருக்கும் இக்காலத்தில் ஆத்மசக்திகளை அனுசரித்து உலகத்தின்கண் பொது வாக இப்பொழுதுள்ள வாழ்வைக் காட்டிலும் உயர்வான விதமாய் எல்லாம் ஸ்நேக பாவத்துடன் வாழ்ந்து வரும் பொருட்டுச் செய்யப்படும் முயற்சியில் எல்லாரும் சேர வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். சுதேச அபிமானம் சரியானவழியில் செலுத்தப்படா விட்டால் தீங்கை விளை விக்குமல்லவா? அதே தேச அபிமானமானது ஆத்ம சக்தி களாலும் நல்ல பாவனைகளாலும் தூண்டப்படுமாகில மனிதவர்க்கத்துக்கு புத்தி சாலித்தனத்துடன் உழைப்ப தற் கடுத்த நியமமாகும்" வட இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் ஸ்ரீ பாரததர்ம மஹாமண்டல சங்கத்தினர் சமீபத்தில் பிறப்பித்திருக்கும் துண்டுபத்திரிகையில் கண்டிருக்கும் அடியிற்கண்ட விஷயம் இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது.

"ஒரு ராஜாங்கத்தைப் போலவே ஜனஸமூகத்தையும் ஜடமாயாவாதமானது மிலேச்சத் தனத்துக்குக் கொண்டு வந்துவிட்டு நாகரீகம் எல்லாவற்றையும் அழிந்து போகும் படி செய்துவிடும்.

மதம் ஈசுவரபக்தி, ஈசுவரியிடம் பக்தி, பொதுவாக ஆத்மார்த்த சிந்தனை இவைகள் மேலேகண்ட விதமாய் மனிதவர்க்கத்தை தாழ்வுக்குக்கொண்டுவாரமல் தடுக்கும். உலகத்தின் கண் நாகரீகமுள்ள வம்சத்தார்கள் நீடித்திருக் கும்படி செய்வதற்குச் சாதனங்களாவன: மதசம்பந்தமான கல்வி ஈசுவரனிடம் பக்தி, பொதுவாக சூட்சும உலகத்தி லும் ஆத்துமதத்துவத்திலும் விசுவாஸம் உலகத்தி லுள்ள எல்லாமத விஷயத்திலும் சமாலப்பார்வை, இவை கள் தாம். உலகத்தில் நிகழும் எல்லாமதங்களும் இந்தியா தேசத்தில் இருப்பதைக்காண்கிறோம்." இத்தியாதி கார ணங்களால் தான் உலகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு ஏற்பட்ட பிரஹ்மஞான சபையானது இந்தியாவில் ஸ்திரப் படுத்தப்பட்டிருக்கிற தென்று மறுமொழி கூறுவோம்.

இந்தியாவிற்கு பிரஹ்மஞான சபையால் ஏற்பட்ட நன்மைகள்:—

இந்த பிரஹ்மஞானசபை இவ்விடத்தில்ஸதாபனமாகுமுன் கிறிஸ்துவப் பாதிரிகள் அவர்கள் மதமே மேன்மையான தென்றும் அவர்கள் நாகரீகமே சிறப்புற்ற தென்றும், இந்தியர்களின் நாகரீகமும், மதமும் இழிவானதென்றும் வாய் கூசாமல் கூறிவந்தார்கள். ஹிந்து மதவிஷயத்தில் யாதொரு பயிர்ச்சியும் இன்றியிருக்க மேல்திசை நாகரீக விஷயமான புஸ்தகங்களை நம்முடைய வாலிபர்கள் படிக்கலானார்கள். ஆத்மார்த்தக் கல்விக்கு இடமில்லாத ராஜாங்கப் பள்ளிக்கூடங்களிலும் ஹிந்துமதத்தைத் தூஷித்தும் கிறிஸ்துவ மதத்தைப் போற்றியும் வந்த பாதிரிமார்களுடைய கல்விச்சாலைகளிலும் படித்து வந்ததின் பலனாக, வாலிபர்களுக்கு இந்துமதத்தில் (அதாவது தங்கள் சொந்த மதத்தில்) இருக்கவேண்டிய அபிமானம் குறைந்து போனதுமன்றி ஒருவிதமான துவேஷபுத்தி கூடயேற்பட்டு வந்தது. இச்சபை இந்தியாவில் ஸ்தாபனமானது முதல் இந்துமதத்தின் உயர்வான கொள்கைகளைப்பற்றி வெகு தெளிவாய் ஆரம்பத்தில் கர்னல் ஆல்காட் என்பவரால் இந்தியாவின் பற்பலபாகங்களில் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. அதாவது ஹிமாசலம் முதற் குமரிவரை இந்து வாலிபர்களின் நன்மையைக்கருதி ஆரிய பாலபோதினி என்ற ஒரு மாதாந்தரப் பத்திரிகை இந்து மதக்கொள்கைகளின் மேன்மையை வெளிப்படுத்தி, பிரசுரம் செய்யப்பட்டுவந்தது மேற்படி பத்திரிகை தான் பின்னால் ஸெண்டரல் ஹிந்து காலேஜ் மாகஸின் ஆக ஏற்பட்டு இப்பொழுதும் நடந்து வருகிறது. பள்ளிக்கூடங்களில் கேவலம் லௌகிக சம்பந்தமான படிப்புமட்டும் சொல்லிக்கொடுத்து வரப்பட்டதில் அதனால் பிள்ளைகளின் நடத்தை ஒழுங்குபடக்காரணம் ஏற்படாதென்று நினைத்து லௌகிகப்படிப்புடன் இந்து மதப்படிப்பையும் கற்பித்துக் கொடுக்கக் காசிப்பட்டணத்தில் ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் ஸ்தா

மிக்கப்பட்டது. அது தான் இப்பொழுது இந்த சர்வகலா சாலையாக யேற்பட்டிருக்கிறது. இந்த மதக்கோட்பாடுகளையும் தத்துவங்களையும் ஹிந்து வாலிபர்களுக்குக் கற்பிக்க சரியான புஸ்தகங்கள் இல்லாமலிருந்தது. மேற்படி காலேஜ் கம்மிட்டியாரால் (1) ஸநாதனதர்ம வினுவிடை (2) ஸநாதனதர்மப் பாலபாடம் (3) பிரௌடபாடம் ஆகிய மூன்று புஸ்தகங்கள் பிரசுரம் செய்யப்பட்டு இப்பொழுது அநேகம் பள்ளிக்கூடங்களில் ஹிந்துமத விஷயமான படிப்பை சொல்லிக் கொடுக்க உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. பௌத்தமத விஷயமாக கர்னல் ஆல்காட் பௌத்தமத வினுவிடையை வெளிப் படுத்தினர். கிருஸ்தவ மதவிஷயமாக மதபுஸ்தகங்கள் வெளியாகியிருக்கின்றன. இப்புஸ்தகங்களைப் படிப்பதனுல் ஒரு மதத்தில் பிறந்தவன் வேறு மதத்திற்குப் போகக்காரணமில்லை யென்றும் வேறு மதங்களைத் தூஷிக்க ஹேதுவில்லை யென்றும் எல்லா மதங்களும் மோக்ஷத்தை அடைய பல வழிகளென்றும் நாம் அறியலாகும் இவ்விடத்தில் அடியில்கண்ட பாசுரங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்றேகுலமு மொருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகும் கதி யில்லை நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே" (திருமந்திரம்)
வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்,
விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டல்லால்,
மாறுபடும் கருத்தில்லை, முடிவின் மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா
(தாயுமானவர்)

அந்தந்த மதங்களின் அபிவிருத்தியின் பொருட்டு ஏற்பட்ட மடங்களின் அதிபதிகள் பொதுவாக இக்காலத்திய வாலிபர்களின் படிப்பு விஷயத்தில் காலத்திற்கு ஏற்றபடி அந்தந்த மதங்களுடைய கோட்பாடுகளையும் தத்துவங்களையும் எடுத்துக் கூறியும் பிறமதங்களைத்

தூஷிக்காம லிருக்கும்படியான விதமாய் புஸ்தகங்கள் பிரசுரம் செய்து அவைகளைத் தற்காலப் பள்ளிக்கூடங் களில் உபயோகப் படுத்தவேண்டிய சாதனங்களைச்செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடமையைச் செய் யாமலிருக்க இச்சபையைச்சேர்ந்த முக்கியஸ்தர்கள் மேற் கண்ட விதமாய் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இந்தப் பஞ்சமர்களை உயர்த்துவதின் பொருட்டும் அவர் கள் தங்கள மதத்தை விட்டு வேறு மதத்திற்குப் போகா மலிருக்கும்படியாயும் தர்ம நீதிகளைப் போதிக்கக் கூடிய புஸ்தகத்தை ஏற்படுத்தியும் சென்னப் பட்டணத்தைச் சுற்றி கர்னல் ஆல்காட்டால் முதல் முதல் பஞ்சமப் பள்ளிக்கூடங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. நவீன லௌகிகப் படிப்புடன் பௌத்த மதத்தைப்பற்றி போதிக்கக்கூடிய பௌத்தமதப் பள்ளிக்கூடம் ஒன்று கூட இல்லாமலிருந்த இலங்கைத்தீவில் அனேகப்பள்ளிக்கூடங் கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

ராஜாங்க விஷயமாக காங்கிரஸ் என்ற மஹாஸபை சென்ற டுப்பத்தைந்து வருஷங்களுக்கு மேலாக வருஷா வருஷம் இந்தியாவில் பல இடங்களில் கூடி வருவதில் ஷை காங்கிரஸ் ஏற்படுவதற்கு மூலகாரணமே இச்சபை தான். எப்படியென்றால் 1884௵ டிஸம்பர்௴ பிரஹ்ம ஞான சபையின் வருஷோற்சவம் அடையாரில் நடந்தது. அதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்த அங்கத் தினர்கள் ராஜீய சம்பந்தமாய்ச் செய்யவேண்டிய சீர் திருத்தங்கள் விஷயமாகவும் இந்திய தேச அபிமானிகள் வருஷா வருஷம் ஏன் கூடக்கூடாதென்று யோஜனை செய் தார்கள். அதன் முடிவாக முதலாவது காங்கிரஸ் பம்பா யில் 1885 வருஷத்தில் கூடியது. இந்த காங்கிரஸ்ஸை உற் பத்திசெய்தவர் ஏ. ஓ. ஹியூம் என்பவர். அவர் இச்சங்கத் தின் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவராவர். காங்கிரஸில் ஊக்கத்துடன் ஆதியில் உழைத்தவேறு பலர்களும் இச்

சபையின் அங்கத்தினர்களே. கிருஸ்துவ வாலிபர்களுக்காக ஒய். எம். ஸி. ஏ. ஏற்பட்டிருக்கிறது போல் இந்திய வாலிபர்களுக்கென்று சங்கம் ஏற்பட வேண்டுமென்று இச்சபையின் தலைவர் ஆகிய மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரால் இந்திய வாலிபர்களுக்கென்று ஒய். எம். ஐ. ஏ. என்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

சாரணர்கள் சங்கம் இந்தியாவில் பரவ இச்சபை தான் காரணம். அதே மாதிரிதான் தொழிலாளிகளின் பொருட்டு இச்சபைத்தலைவர்களே சங்கங்களை ஏற்படுத்தினர். பலவிடங்களில் தேசாபிமானத்தை இத்தேச வாலிபர்களுக்குப் புகட்டும் பொருட்டு பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் சர்வகலாசாலையும் ஏற்படுத்தபட்டன. மதவிஷயமான ஸங்கதிகளை மட்டும் போதிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள் மடம் முதலியவைகளுக்கு ஒப்பந்தம் இச்சபையைப் பாவித்து இச்சபையின் முக்கியஸ்தர்கள் அவ்விதம் நடக்கவில்லையென்று விபரீதமாக எண்ணி குற்றம் கூறிச் சிலர் பேசிவருவது சரியல்ல. இச்சபையின் உயர்ந்த நோக்கத்தை அவர்கள் அறியாமல் தவறான எண்ணம் கொண்டிருப்பது விசனிக்கத்தக்கது.

இச்சபையினால் நான் அடைந்த பிரயோஜனம்.

1883ம் வருஷத்தில் இச்சபையின் முதல் அக்கிராஸனர் ஆகயிருந்த கர்னல் ஆல்காட் என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் செய்த உபந்யாசத்தைக் கேட்டேன். இது முதல் இச்சபையின் முக்கியஸ்தர்களால் அப்போதைக்கப்போது செய்யப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்த உபந்நியாசங்களையும் இச்சபையாரால் வெளியிடப்பட்ட சில புஸ்தகங்களையும் ஸாவகாசப்பட்ட காலங்களில் படித்துக் கொண்டுவந்தேன். 1897ம் வருஷத்தில் சந்தர்ப்பம் வாய்த்த பொழுது இச்சபையில் சேர்ந்தேன். அது முதல் சாவகாசப்பட்ட காலங்களில் இந்த சபைக்கு முக்கியஸ்தானமாகிய அடையாரில் கூடும் வருஷாந்திரக் கூட்டத்

திற்குப்போக ஆரம்பித்தேன். அவ்விடத்தில் ஐரோப்பா கண்டத்தின் பல தேசங்களிலிருந்தும் அமெரிக்கா ஆஸ்தி ரேலியா முதலிய கண்டங்களின் பல மாகாணங்களி லிருந்தும், இந்தியா பர்மா இந்த தேசங்களின் பல பாகங் களினின்றும் அநேக அங்கத்தினர்கள் வந்து கூடுவதைக் கண்டேன். மேற்படி அங்கத்தினர்களுக்குள் நிகழ்ந்துவரும் சகோதர பாவத்தையும், ஒற்றுமையையும் கண்டு ஆனந்தங் கொண்டேன். வெள்ளைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவ்விடத்தில் ஐக்கிய பாவம் உண்டாகி வருகிறதற் கொப் பந்தம் வேறு இடத்தில் காணவில்லை. தேசம், பாஷை, நடை, உடை, மதம் இவைகளில் வித்யாசம் இருந்தாலும் எல்லா ரும் ஈசுவரன் பிள்ளைகள் தான் என்ற பாவனையில் சகோதரத்துவம் இவ்விடத்தில் நிகழ்ந்து வருவதற் கொப் பந்தம் வேறு இடத்தில் பார்ப்பது துர்லபம் என்றே சொல்லலாம். அதைப்பற்றி நினைக்க நினைக்க நான் மற்றவர் கள் விஷயத்தில் பல வகையாக முன் கொண்டிருந்த துவேஷபுத்தியானது என்னை விட்டு நாளடைவில் விலகி விட்டது. இப்பொழுது ஒருவரைப்பற்றியும் தூஷித்துப் பேச என் மனம் துணியவில்லை. ஈசுவரனுடைய நாடகத் தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேஷத்தைப் போட்டுக் கொண்டு ஆட நியமிக்கப்பட்டவர்க ளென்ற பாவனை யுடன் ஒவ்வொருவரும் நடப்பது நன்மை யென்று உணர் ந்து அவ்விதமே சமயம் வாய்த்த காலங்களில் மற்றவர்களுக் கும் சொல்லிவருகிறேன். ஜனங்கள் விகாசமுறையில் பல படிகளி லிருப்பதால அவர்களுடைய செய்கைகளும் பல வகைபாய் இருப்பதாயும் புத்தி விஷயத்தில் தாரதமமியம் ஏற்பட்டிருப்பதாயும் அதனால் ஒருவரை ஒருவர் நிந்திக்கக் காரணமில்லை என்றும் புத்திமானகள், ஞானிகள் இவர்கள் தங்களைப் பார்க்கிலும் புத்தியிலும் ஞானத்திலும் குறைந்த வர்களுக்கு வேண்டிய நற்போதனைகளைச்செய்து முன்னு க்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் அறிந்தேன். பணமுள்ளவர்கள் பணமில்லாதவர்களுக்குத்

தங்களால் இயன்றமட்டில் பொருளுதவி செய்துவர வேண்டுமென்றும் இவ்விதமே ஒவ்வொருவரும் மற்றவர் களுக்குத் தன்னால் இயன்றமட்டும் உதவிபுரியக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்றும் ஈசுவரன் அன்பின் சொருபமே ஆதலால் அவருடைய குழந்தைகளாகிய ஜீவராசிகள் விஷ யத்தில் அன்பை ஒவ்வொருவரும் பாராட்ட வேண்டுமென் றும் அப்படியானால் தான் ஈசுவரனுடைய அன்பையும் அனுக் கிரகத்தையும் பெறலாமென்றும் தெரிந்துகொண்டேன். இதன் பேரில் தான் ராஜாங்க நியாயாதிபதிகளால் குற்ற வாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டு தெண்டனை அடைந்து சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டவர்களிடம் போய் சன்மார்க்கம், மதம், இவைகளைப்பற்றிப் போதித்துக் கொண்டு வருகிறேன். பறைச்சேரிகளிலும் போய் மதுபான த்தின் கெடுதிகளைப்பற்றி போதித்து வருகிறேன். பொது விஷயங்களில் என்மனதில் எது சரி என்று தோன்றுகிற தோ அதை சங்கோசமன்னியில் எடுத்துரைக்கவும் தைரியம் ஏற்பட்டிருக்கிறது. உத்யோகப்பற்றை விட்டு விலகினது முதல் பொதுஜன உபகாரார்த்தம் என் சக்திக் குத் தகுந்தபடி உழைப்பதே மேலென்றுணர்ந்து அவ்விதம் செய்து கொண்டுவருகிறேன். இதற்கெல்லாம் காரணம் பிரஹ்மஞான சபையின் கோட்பாடுகளும் அதன் முக்கி யஸ்தர்கள் நடித்துக்காட்டும் நடத்தைகளுமே.

சுபம் சுபம்! ஓம் தத் ஸத்.

கே. எஸ். இராமசந்திரையர்

The Story of the Other Wise Man.

அர்த்தவான்

அல்லது

மற்றொரு ஞானியின் சரித்திரம்.

[40ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு அவன் எரது அரசனது சிறைச்சாலை யோரமாய்ப்போகையில் அங்கே சில மஸிடோனியச்சிப்பாய்கள் கலைந்தவுடையும் அவிழ்ந்த கூந்தலையுமுடைய ஒரு இளம் பெண்ணைப் பலவாறாகப்புடைத்தும் இடித்தும் தரதரவென்று இழுத்துக்கொண்டு சிறைச்சாலையை நோக்கிச் செல்வதைக்கண்டான். தனது நிலைமையைக் கண்டு பரிதபித்து நின்ற நமது கிழவனைப்பார்த்ததும் அவள் தனது கையைநீட்டி அவனது வேஷ்டியின் துனியைப்பிடித்துக் கொண்டு "பெரியவரே, என்னைக்காப்பாற்றும். சற்று என் மீது இரங்கும். என் இறைவ, நானும் தங்களது ஈரான் (Iran) தேசத்தில் பிறந்தவளே. எனது தகப்பன் பாரஸீக தேசத்தில் வியாபாரியாயிருந்து காலஞ் சென்றார். அவர் பட்டகடனுக்காக என்னைப் பிடித்திழுத்துப் போகிறார்கள். என்னை அடிமையாக விற்கப் போகிறார்களாம். என் மானத்தைக் காப்பாற்றும். நான் தங்களையே நம்பியிருக்கிறேன்" என்று கதறினாள்.

இவ்வளவு கொடுமையும் உலகிலுண்டா, என்று திடுக்கிட்டவனாய், அர்த்தவான் தன்னிடமிருந்த முத்தை யெடுத்து அந்தப் பெண்மணியின் கையிற் கொடுத்து "குழந்தாய் இறைவனுக்கென்று வைத்திருந்த நிதிகளில் மீந்ததிதுவே. இதைக்கொண்டு உன்னுடைய ஆபத்தைத் தீர்த்துக்கொள்" என்று தேற்றினான்.

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையிலேயே வானங் கறுத்து இடியிடித்து உலகமெல்லாம் கிடு கிடு என்று நடுங்கியது. அது மஹத்தான துக்கமடைந்த மனிதனொருவனது மார்பு துடிப்பது போலவுங் காணப்பட்டது. வீட்டுச் சுவர்களெல்லாம் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. ஆகாய முழுமையும் புழுதியால் நிறைந்தது. சிப்பாய்களும் இருந்தவிடந் தெரியாமல் மூலைக்கொருவராய் ஓடிவிட்டனர். அர்த்தவானும் அவனது ரக்ஷணையைப் பெற்ற பெண்ணும் மாத்திரம் சுவரோரமாகப் பதுங்கிக் கொண்டனர். (இதனால் பூகம்ப முண்டாயிற்றென்று இதை வாசிப்பவர் அறிந்து கொள்வர்.) பூகம்பம் தணிந்த சமயத்தில் கூரையிலிருந்த பருவான ஓடு ஒன்று இடம் பெயர்ந்து உருண்டு வந்து அர்த்தவான் நெற்றியில் விழுந்து அதிகமாய்க் காயம் செய்தது. அர்த்தவான் கிழவனான படியால் வலி பொறுக்கமுடியவில்லை. பேச்சு மூச்சு இல்லாமலும் இரத்தம் ஆறாய்ப் பெருகவும் அவ்விடமே அசைவற்றுக் கிடந்தான். அப்பொழுது அவனுதவிபெற்ற பெண் "ஐயோ, எனக்குதவி செய்தவருக்கு என் கண் முன்னாகவே ஆபத்து வந்து விட்டதே. நான் இவ்வளவு பாவம் செய்தவளா? இவர் உயிருடன் எழுந்திருக்கமாட்டாரா? இறந்த தகப்பனைப் பெற்றவளாகத் தேறுவேனே" என்று பலவாறாகப் பிரலாபிக்கையில் ஒரு அசரீரி வாக்கு அங்குண்டாயிற்று. அது குழலினும் யாழினுமினியதாகவும் தெளிவாகவும் யாரோ தூரத்திலிருந்தொருவர் பேசுவது போலவுமிருந்தது. பெண்மணியும் நாற்புறமும் பார்த்தாள். ஒருவரையுங் கண்டிலள். தன தலைக்குமேலிருந்த ஜன்னல் வழியாய் சிறைச்சாலையினுள்ளும் உற்று நோக்கினள். அங்கும் ஒருவரையும் கண்டிலள். அப்போது அர்த்தவான் தன் வாயைத் திறந்து அந்த அசரீரிக்குப் பின் வருமாறு பதிலுரைத்தான். "ஸ்வாமீ! அதெவ்வாறாகும்! நான் தாங்கள் பட்டினியிருந்ததை யெப்போது கண்டேன்? தங்களுக்கெப்போது உணவளித்தேன்? தான்

கள் எப்போது நெஞ்சுலர்ந்து வருந்தினீர்கள்? நான் எப்போது தண்ணீர் கொடுத்தேன்? தாங்கள் எப்போது திக்கற்றவனாய் என்னிடம் வந்தீர்கள்? நான் எப்பொழுது தங்களையேற்று உபசரித்தேன்? தாங்கள் எப்போது ஆடையில்லாமலிருந்தீர்கள் ஆடை கொடுக்க? தாங்கள் எப்போது நோயால் வருந்தினீர்கள் அல்லது சிறையில் கிடந்தீர்கள்? நான் எப்போது தங்களை வந்து பார்த்தேன்? முப்பத்துமூன்று வருஷம் ஓயாமல் அலைந்தும் தங்களது திருவுருவத்தை ஒரு தரமாவது நான் தரிசனம் செய்தவனல்லன். என் இறைவ, தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. இவ்வுலகில் ஒரு நாளாவது தங்களுக்குப் பணிவிடை செய்தறியேனே" என்று சொல்லி உருகினான். இவன் சொல்லி முடித்ததும் முன் போலவே அசரீரியும் பேசிற்று. அப்போதும் அந்தப் பெண்ணுக்கு அந்த வாக்கில் ஒரு பதங்களும் விளங்கவில்லை. ஆனால் அத்தவானுடைய அந்தராத்மாவுக்கு மாத்திரம் அசரீரி வாக்குச் சொல்லியது இன்னதென்று விளங்கியது. அதாவது "என்னுடன் பிறந்தவும் அதியல்பமுமான ஒரு பிராணிக்குச் செய்த நன்றியும் எனக்குச் செய்ததாகிறது. இது தான் ஸத்யம், ஸத்யம். ஸத்யம்."

எஸ். ஆர். அனந்தநாராயணையர்

மோஹினிக் கதை.

துஷ்டராஜகுமாரன் நல்லரசனாக மாறினது.

ஓரானொரு சிறு ராஜ்யத்தை ஒரு யுவராஜா ஆண்டு வந்தான். அவன் தகப்பனிறந்து போய் தாயும் தானுமாக இருந்து வந்தான். அவன் ஆண்டு வந்தான் என்பதினால் நான் கொண்ட அபிப்பிராயம் அவன் இராஜாங்க கட்டளை

களில் கையொப்பம் செய்து வந்தான் என்பதே. அவனுடைய தாயோ எந்த விஷயத்தைப் பற்றியும் அமைச்சரோடும் குடிகளின் பிரதிநிதிகளோடும் மந்திராலோசனை செய்து வருவாள். அந்த வயதான அரசி பெருந்தன்மையுடையவள். வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பாள். தன் ராஜ்யத்தில் உண்டான பஞ்சத்தையும் கஷ்டத்தையும் ஒருவாறு நிவர்த்திக்கத் தன்னாலியன்ற மட்டில் பிரயத்தனப்பட்டு வந்தாள்.

ஆனால் யுவராசனோ கொஞ்சம்கூட ஜீவகாருண்ணியமில்லாதவனாக இருந்தபடியால் குடிகள் அவனிடத்தில் அன்பு பாராட்டினவர்களல்ல. அவனோ தன்னிஷ்டப் பிரகாரமிருந்து வரலான மனிதர்களும் மிருகங்களும் தனக்கு உழைப்பதற்கும் தன் தேகத்தை கொழுக்கச் செய்வதற்குமே ஏற்பட்டன வென்று அபிப்பிராயம் கொண்டவனாகத் திரிந்து வந்தான். இப்படி இருக்க, ஒரு நாள் அநேக வேட்டைக்காரர்களோடு அரசகுமாரன் காட்டில் வேட்டையாடினான். திடீரென அவன் கண்ணுக்கு ஒரு கலைமான் தன்னிருகொம்புகளையும் மரங்களுக்கு மத்தியில் விட்டுக்கொண்டிருப்பதாகக்கண்டான். அந்தக் காக்ஷி அரசகுமாரனின் மனதைக் கவர்ந்தது. மெள்ள மெள்ளத் துப்பாக்கியை மறைத்துக்கொண்டு நாய்களைகூட்டிக்கொண்டும் அந்த திக்கற்ற மிருகத்தினிடம் அணுகினான். அந்தக் கலைமான் தலையை திருப்பி விழித்த நீண்ட பார்வையாக அரசகுமாரனைப்பார்த்தது. சற்றுநேரத்துக்கெல்லாம் தாவி ஓடிற்று. தாவுகிறதும் சற்று நிற்பதும் மறுபடி தாவி ஓடுகிறதுமாக இருந்தது. அரசகுமாரனும் அதைவிட்டானில்லை. பின் தொடர்ந்து சென்றான், அதை எப்படியாவது பிடித்துத்தானாகவேண்டுமென்று நினைத்தான். மைத்த எல்லாவற்றைப் பார்க்கிலுமிதுவே அவனது ஆசையைப் பெருக்கிற்று. கலைமானோ அரசகுமாரன் வலையிலகப்பட்டதுபோல் பாசாங்கு செய்தது. சற்றுநேரம் கொஞ்சமும் சலியாமல் அப்படியே

கிற்கும். அரசகுமாரன் குறி எடுத்துச் சுடும்போதெல்லாம் கொஞ்சம் ஒதுங்கிவிடும். இரண்டுமணிநேரம் இந்தப்படி அரசகுமாரன் போய்க் கொண்டிருந்தான் அவனைக் களைப்பும் பசியும்கொள்ளை கொண்டது. இருந்தாலுமிந்தமான் வேட்டையை விடமாட்டான். கடைசியாக இனித் தூங்க முடியாதென்றுகண்டு ஒருநிமிஷப்போது உட்கார்ந்தான். அடர்ந்த காட்டில், தான் ஒன்றியாக இருப்பதை அறிந்தான். தன்னுடன் வந்த நாய்களும் தன்னை விட்டகன்றன. அப்போது இருட்டும் மெள்ள வர ஆரம்பித்தது. இருள் மூடவே, எங்கேயாவது கரி சுடுபவர்களுடைய குடிசையாவது ஒரு கொட்டடியாவது அகப்படுமோ என்று சுற்றுமுற்றும் பார்த்தான். திடீரென அதிக தூரம் என்று சொல்வதற் கில்லாதபடி மினுக்கு மினுக்கென்று வெளிச்சத்துடன் சிங்கார மண்டபம் ஒன்று அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதற்குப் பக்கத்தில் போய் தன்னுடைய நாயாவது மானாவது அங்கே இருக்கிறதா வென்று சுற்றிப் பார்த்தான். அவன் திருஷ்டிக்கு ஒன்றும் தென்படவில்லை. மண்டபத்துக்கு வந்த உடனே அங்கே இருந்த லாந்தரை கையிலெடுத்துக் கொண்டு இப்பேர்ப்பட்ட அடர்ந்த காட்டில் யாரிந்த லாந்தரைப் பொருத்தி வைத்திருக்கக்கூடும் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போதே பாரைச் சுவற்றில் ஒருவழி அவன் கண்ணுக்குத் தென்பட்டது.

அரசகுமாரன் கெட்ட பையன் என்று முன்னமேயே சொல்லி இருக்கிறோமல்லவா? அதற்கு ஏற்றபடி தைரியஸ்தனாகவு மிருந்தான். ஆகையால் கொஞ்சமும் பயந்தவனல்ல. வாசலண்டையில் நேராகப்போய் அந்த வாசற்படி தான் சாதாரணமாக நுழைந்து போகக்கூடிய அவ்வளவு அகலமான தாயிருக்கவும் கண்டான். ஒரு நிமிஷம் தானிருக்கும் அவன் இன்னது செய்வதென்று தீர்மானித்தது உடனேஉள்ளே நுழைந்தான். ஒரு சிறு பாதையில் கொண்டு

வந்து விட்டது. சந்தடி செய்யாமல் அடிமேலடி வைத்து லாந்தரைத் தூக்கி பிடித்துக்கொண்டு நடந்து சென்றான். அந்த நடம் இறக்கத்துக்குப் போக இருந்தது. கால்மணி நேரத்திற் கெல்லாம் ஒரு பெரிய வெட்டார வெளிச்சத்திற்கு வந்தான். இந்த மைதானத்தில் கருப்பு நிறமான பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட ஒரு பெரிய கோட்டையைக் கண்டான். அதன் வாசல்களோ ஆணிப்பொன்னால் இழைக்கப்பட்டிருந்தன. ஜன்னல்களெல்லாம் பலவித வர்ணக் கண்ணாடிகளாலாக்கப்பட்டிருந்தது. அரசகுமாரன் அத்தியாச்சரியத்தோடு சுற்றிச் சுற்றி பார்த்தான். இவ்விதக் காக்ஷியை அவனிதற்கு முன் எப்போதும் கண்டதில்லை.- முட்டாள் அரண்மனை அதிகாரிகள்! இப்பேர்க்கொத்த வாசாமகோசரமான மாளிகை ஒன்று என்னி ராஜ்யத்திலிருப்பதாக ஏனிதுவரையில் என்னிடம் ஒருவரும் சொல்லவில்லை? அரண்மனை போய்ச்சேர்வதுதான் தாமதம் அவர்கள் எல்லோரையும் வேலையிலிருந்து நிறுத்தி விடுகிறேன் என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டான்.

பிறகு நேராக கோட்டைப்பக்கம் போய் வாசலில் நுழையும் போது இரண்டு பெரிய சிங்கங்கள் அவன் வழியை மறித்தன. உடனே பயப்பிராந்தி கொண்டு தன் துப்பாக்கியைப் பார்த்தான். அது தன்னிடமில்லை யெனக்கண்டான். அதை அவன் சிங்கார மண்டபத்திலேயே விட்டுவிட்டதாக ஞாபகம் வந்தது.- சிங்கங்களோ சமீபத்துக்கு வரலாச்சுது. இன்னது செய்வதென்று தெரியாமல் தன்னிடத்தில் உள்ள ஓரே ஆயுதமான லாந்தரை தனக்கு முன்னால் தூக்கிப் பிடித்தான். இந்த லாந்தர் வெளிச்சத்தைக் கண்டவுடன் சிம்மங்கள் பின்னுக்கு வாங்கிக்கொண்டும் வாலை குழைத்துக்கொண்டும் கீழே படுத்துத் தலைகளை முன்னங்கால்களுக்கு நடுவில் தொங்க விட்டுக்கொண்டும் கிடந்தன.

இதுதான் சரி என்ற எண்ணத்துடன் படிக்கட்டுகள் ஏறிப்போய் கோட்டைக்குள்ளே போய்ச்சேர்ந்ததாக கண்டான். அரசகுமாரன் பெருமையாக ஐசுவரியத்திலே யே வளர்ந்து வந்தவன். ஏதாவது தேவை என்று தோன்றி னல் உடனே அதை வாங்கிவிடுவான். அவனுக்குப் பணம் இல்லா விட்டால் குடிகளை இம்சைசெய்து, கொடுக்கும் படி செய்வான். அவன் ஒரு பெரிய அரண்மனையில் வசித்தவன். அந்தக் கட்டிடத்தில் எங்கு கண்டாலும் பொன்னும் வெள்ளியும் மகமலும் பட்டும் குவிந்திருக்கும். ஆனாலுமிந்த விடத்திலிருப்பது போல அவ்வளவு விப வத்தை அவன் எப்போதும் கண்டவனல்ல. அவனிருந்தது ஒரு பெரிய கூடம். அதன் மத்தியில் ஒரு குண்டத்தி லிருந்து மனோகரமான வாசனை வீசிற்று. அந்தக்குண்டத் தைச் சுற்றிலும் நேர்த்தியான அல்லிகள் உண்டாயிருந் தன. தரைகள் அழகாய் இழைக்கப்பட்ட சித்திரங் களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நெற்றிக்கண் எல்லாம் பச்சைக்கண்ணாடிகளால் இழைக்கப்பட்டிருந்ததைப் பார்த் தால் மரகதங்களைப்போல் மனோகரமாயிருந்தது. சுவ ரெல்லாம் குலாபி ரோஜா நிரப்பளிங்குக் கற்களால் கட்டப் பட்டிருந்தது. சுவர்களின் ஓரமாக தேவதாரு மரங்களால் செய்யப்பட்ட ஆசனங்கள் போடப்பட்டிருந்தது. அவை களின் பேரில் இருண்ட சிகப்பு மகமல் மெத்தைகள் விரிக்கப்பெற்றிருந்தன.

அனேக கதவுகளும் மெத்தைப்படிகளும் அவன் கண்ணுக்குத் தென்பட்டன. அகஸ்மாத்தாய் வலது கைப் புறம் உள்ள முதல் கதவை திறந்தான் உடனே தான் ஒரு பெரிய அரைக்குள் இருப்பதாகக் கண்டான். அந்த மாதிரி அரையை அவனிது வரையில் எங்கும் கண்டதே இல்லை எனத்தேர்ந்தான். இதில் கூட சித்திர வேலைகளால் தள வரிசை செய்யப்பட்டிருந்தது. சுவர்களிலிருந்து சரிகைத் தொங்கல்கள் அதிக அழகிய விதவிதமான வர்ணங்களில் தொங்கின. நெற்றிக்கண் எல்லாம்

நக்ஷத்திர முத்து நடுவில் சந்திரன் பிரகாசித்த ஆகாயம் போலக் காணப்பட்டது. ஒரு மறைவான குண்டத்திலிருந்து பிரகாசிக்கும் ஒரு புதுமாதிரியான தீபத்தை அந்த அரசகுமாரன் கண்டான். அவனிப்போது இருக்கும் இடம் பூமிமட்டத்துக்குங் கீழே இருப்பதால் அந்த வெளிச்சம் சூரியனிடத்தி லிருந்தாவது சந்திரன் அல்லது நக்ஷத்திரங்களிடத்தி லிருந்தாவது வர நியாயமில்லை எனவும் கண்டான். இங்குமங்கும் அழகானவும் நாகரீகமானவுமான வர்ணங்களில் ஆசனங்களும் கருப்பு மரங்களால் செய்து முத்துச்சிப்பி களாலிழைக்கப்பெற்ற மேஜைகளும் தான் விருக்ஷங்களினடியில் போடப்பட்டிருந்தன. பிரதிமை பெரியதாயும் வெளுப்பு நிறத்தோடும் கூடி கையில் ஒரு வாத்தியப் பெட்டியையும் தாங்கிக்கொண்டு நிற்பதையும் அந்த அரசகுமாரன் கண்டான். அந்த வாத்தியப் பெட்டியை அரசகுமாரன் தொடவே அறைமுழுவதும் திவ்வியமான சங்கீதத் தொனி நிரம்பியது. இந்த மாதிரி ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்த்து வந்து கடைசியாக மேல்மெத்தைக்கு போனான். அந்தக் கோட்டை முழுவதையும் பார்த்தால் அதில் குடி இருந்து வருவதான சின்னங்களிருந்தது. ஆனால் ஒரு இடத்திலாவது ஒரு ஜீவப்பிராணியைப் பார்த்ததில்லை. மெத்தையில் கீழ்தளத்தைவிட ஜாஸ்தி அறைகள் இருந்தன. அவைகளில் ஒன்றில் ஒரு நேர்த்தியான படுக்கையும் கை கழுவுவதற்கு ஒரு அழகான பீங்கானும் விலையுயர்ந்ததும் பிரகாசமுமான உடுப்புகள் நிறைந்த பெட்டிகளும் இருந்தன. அரசகுமாரனுக்கோ சில மணி நேரமாக தான் நேரில் பார்த்ததினாலும் அனுபவித்ததினாலும் அதிகமாக மயங்கி அதிசயப்பட்டு விளக்கை நிறுத்திவிட்டு உடுப்புகளைக் கழற்றி எறிந்து படுக்கையில் படுக்கலாம் என்று நினைத்தான். முதலில் கொஞ்சம் படுத்து சிரமபரிகாரம் செய்து கொண்டேனானால் நாளைத் தினம் திரும்பிப்போகலாம் என்று எண்ணினான். எவ்வளவு காலந் தூங்கினானென்பது அவனுக்குத் தெரியாது தூங்கி

எழுந்தபோது அந்த அறையில் ஏதோ சில ரகசியங்கள் இருப்பதாகவும் குளிர்ந்த காற்று தன்மேல் வீசினதாகவும கண்டான். அந்த அறை வெள்ளிச்சமும் இருட்டுமாக இருந்தது. வாஸ்தவத்தில் ஏதோ ஒன்று இருப்பதாயும் நீண்ட தாடியும் இருண்ட தேகமும் சிவப்பு மகமல் உடுப்பும் உடைய ஒரு ராக்ஷஸனிருப்பதாகவும் கண்டான். அந்த ராக்ஷஸனுடைய கண்கள் அரசகுமாரன் பேரில் கோபப் பார்வையைச் செலுத்தின.

"சரி! சரி எனது பிரியமான அன்பார்ந்த அரசகுமாரா என்னுடைய படுக்கையில் உன்னைப் படுத்துக்கொள்ளும்படி யார் உத்திரவு கொடுத்த" தென்று கோடை இடிபோல அந்த உருவம் பேச ஆரம்பித்தது.

"எனக்கு! எனக்கு! தெரியாது!" என்று அரசகுமாரன் உளரி அடித்தான். "தெரியாதா? தெரியாதா? வாஸ்தவமாக உனக்கு ஒன்றும் தான் தெரியாது. உன் தாயார் வார்த்தையை நீ கேட்டிருந்திருக்கிற பக்ஷத்தில் இந்த உலகத்தில் மனித ஜன்மத்தைத்தவிர வேறு ஜீவன்களும் இருக்கின்றன என்று தெரியவரும். ஆனால் உன்தாயார் சொன்னபோது உனக்குப் பரிகாசமாக இருந்தது. நீயும் சிரித்தாய். கார்மனுசன் என்ற ஒரு ராக்ஷதனிருப்பதாக உன் தாய் உனக்குச் சொல்லவில்லையா?" "ஆம் வாஸ்தவம் தான். அவள் சொன்னதுண்டு, அந்த ராக்ஷஸன் வெகு தூரத்திலிருப்பதாக வல்லவோ சொன்னது. ஆனால் நானிப்போது ஊருக்குச் சமீபத்திலேயே இருக்கிறேனே," என்று அரசகுமாரனுரைத்தான்.

"தூரத்தில் தான் அவனிருக்கிறான் ஹா. ஹா. இன்புற்ற அரசகுமாரா? நீ இப்போது அந்த கார்மனுசுடன் தான் இருக்கிறாய்." என்று இடி இடி என்று சிரித்தான். "நீ ஏற்கனவே வீட்டை விட்டு வெகுதூரம் வந்துவிட்டாய் வீட்டை விட்டும் இரண்டு வருஷங்களாகிறது. என்னுடைய சிறிய சிநேகிதனே! உனக்குக் காலம் போனதே தெரிய

வில்லை" என்று ராக்ஷசன் சொல்லவே அரசகுமாரன் அவனைப் பார்த்து "நான் நேற்றைய தினம் ஒரு மானைப் பின் தொடர்ந்து வந்து வழி தப்பி ஒரு மண்டபமும் அதில் ஒரு லாந்தல் வெளிச்சத்தையும் கண்டு அந்த வெளிச்சத்தைக் கொண்டு வழி கண்டு பிடித்து இந்த இடத்திற்கு வரவில்லையா?" என்று கேட்டான். "வாஸ்தவமாக நீ ஒரு மானைப் பின் தொடர்ந்தது தான். அதில் சந்தேகமே இல்லை. நானே அந்த மானாக வந்தேன். நீ பார்த்த லாந்தலையும் நானே அங்கே வைத்தேன். அதைக் கொண்டுதான் நீ இங்கே வந்தாய். இதெல்லாம் வாஸ்தவந்தான்" என்று அந்த ராக்ஷசனும் பதிலுரைத்தான். பிறகு அரசகுமாரன் "எதற்காக அந்தச் செய்கைகளெல்லாம் செய்தாய்" என்று கேட்க, ராக்ஷஸன், "எதற்காகவா? நீ தெரிந்து கொள்ளவில்லையா? நான் உன்னுடைய கர்வத்தைத் தரைமட்டமாக்கி ஜனங்களிடம் நீ வைத்திருக்கும் உபேக்ஷையைத் திருத்துவதற்காகவும், மனிதனானாலென்ன, மிருகமானாலென்ன, எதனிடத்திலும் நீ அன்பு பாராட்ட வேண்டுமென்று உனக்குக் கற்பிப்பதற்காகத்தான் அப்படிச் செய்தது" என்றான். "இத்தனை ஜனங்களிருக்க என்னைப் பொருக்கி எடுத்தது என்னத்திற்காக? சொல்ல வேண்டு"மென்று கேட்க ராக்ஷஸன் சொல்லுகிறான். "நீ எந்த பிரஜைகளை அடக்கி ஆள்வதாக எண்ணி இருக்கிறாயோ அந்த ஜனங்களுக்கு நான் ரக்ஷகன். எழுந்திருந்து உன் முதற் பாடத்தைப் படித்துக் கொள்" என்று ராக்ஷஸன் சொல்லவே, அரசகுமாரன் எழுந்து உடுப்புகளை போட்டுக் கொண்டான். அதற்குள் ராக்ஷஸன் அரசகுமாரனைப் பார்த்து "பாலகுமாரா அது அவசியமில்லை" என்று சொல்லி அரசகுமாரன் முகத்தைக் குறிப்பாய்ப் பார்த்தான். பார்த்ததும் அரசகுமாரனுக்குத் தன் தேகத்தில் ஒரு மாறுதல் உண்டாவதாக உணர்ச்சி வந்து கொண்டிருக்கும் போதே ஒரு மானாகவே உருமாறித் துள்ளி ஓடினான். அரசகுமாரன்

ஏதாவது சொல்லி இருந்திருப்பான் ஆனால் அதற்குள். கர்மனுச ராக்ஷஸனும் அலங்கார மண்டபமும் லாந்தல் வெளிச்சமும் எல்லாம் மாயமாய் மறைந்து போய் விட்டது.

அப்போது அரசகுமாரனுக்குத் தோன்றாததெல்லாம் தோன்றியது. "என்ன பிரிதாபம்! நானிப்போது என்ன செய்யவேண்டும்! செய்ய வேண்டியதென்ன எனக்கு! சூன்யம் வைத்து விட்டான். இதிலிருந்து நான் எப்படித் தப்பித்துக் கொள்ளப் போகிறேன்!" என்று அரசகுமாரன் அழுத குரலாகச் சொல்லவே, "நீ செய்த கருமங்களின் பலப்பிராப்தியை சாந்தமனத்துடன் பொறுத்துக் கொள்வதே" என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று. அரசகுமாரன் பிறகு படுத்தான். மான் ரூபமான அவனுடைய கண்களில் நீர் ததும்பிற்று. இந்த கஷ்டங்கள் எல்லாம் அவன் தானே தேடிக் கொண்டதல்லவா? அரசகுமாரனாக இருந்து தான்செய்த கெட்ட கருமங்களின் பலனல்லவோ இந்த சங்கடங்கள் என்று நினைத்து மறுபடி பெருமூச் செறிந்தான். உடனே ஒரு கொம்பு சப்தம் கேட்க எழுந்து ஓடினான். பிரயோசனமில்லை! காலாதீதமாகி விட்டது! அவனை ஏற்கனவே கண்டு கொண்டார்கள்! மனிதர்களும் நாய்களும் தன்மேல் பாய்ந்து வருவதைக் கண்டான். துப்பாக்கி சப்தம் கேட்டது. உடம்பெல்லாம் தேள் கொட்டினாற் போல் வலித்தது. மறுபடியும் ஒரு தடவை கர்மனுசன் கோட்டைக் குள்ளிருப்பதாகக் கண்டான். "இந்த கஷ்டமெல்லாம் சீக்கிரமாக வந்ததா! மான் வேட்டையாடுவது ஒரு ஆனந்தமல்லவா? என்ன! ஆனால் மானுக்கு ஆனந்தமில்லையோ? நிச்சயமாய் ஒருக்காலுமிராது! ஆனால் இதைப்பற்றி நீ எப்போதாவது நினைத்திருப்பாயா? இது மட்டும் போதாது" என்று அவனை கடிந்து கூறி கர்மனுசன் அவன் பேரில் பார்வையைச் செலுத்தினான்.

மறுபடியும் தன் தேகத்தில் ஒரு மாறுபாடு உண்டாவதாகத் தோன்றிற்று. அவன் கை கூழையாகப் போய் விட்டது. அவனுடைய கால்கள் ஒன்றுக்கொன்று பின்னிக்கொண்டு வால் மாதிரி ஆகி விட்டது. உத்தரக்ஷணமே ஒரு மீனைப்போல் ஜலத்தில் உல்லாசமாக நீந்த ஆரம்பித்தான். தனக்குப் பேசும் சக்தி போய் ஊமை மாதிரி ஆய்விட்டதைப்பற்றி விசனித்தான். பேசக் கூடியதாயிருந்தால் பெருமூச்செறிந்து அழுதே இருப்பான். ஆறு சமுத்திரங்களும் சங்கமமாகிற இடம் வரையில் வெகுதூரம் நீந்தினான். இன்னது சம்பவிக்கப்போகிறது என்பது கூடத்தெரியாது நீந்தினான். திடீரென ஒரு வலிப்பு உண்டாயிற்று. மற்றொரு வலிப்பும் உண்டாயிற்று. மூன்றும் தடவையும் ஒரு வலிப்புண்டாயிற்று. ஜலம் எல்லாம் வற்றிப் போய் விட்டது. தன்னைப் போல் கஷ்டப்படும் பத்து சிநேகிதர்களுடன் ஒரு வலைக்குள் சிக்கிக் கொண்டதாகக் கண்டான். உடனே தன்னை ஒரு தண்ணிறைந்த தொட்டியில் போட்டு பட்டினத்திற்கு அனுப்பப்பட்டதாகக் கண்டான். அப்படி கொண்டு போன இடம் தன்னுடைய ராஜ்யத்தின் தலைமை நகர் என்று தெரிந்தபோது அவனுடைய பயத்துக்கும் அளவுண்டோ? அழகான இறக்கைகளுடனமைந்த ஒரு அதிக நேர்த்தியான மீன் எனத் தெரிந்ததும் அதை அரசியிடம் கொண்டு போய்க் கொடுத்தார்கள். இப்படியே, அவன் தன் தாயாருடைய சமயற்கட்டுக்குள் வந்து சேர்ந்தான். சமயற்காரனிவனை மறுபடியும் ஒரு தடவை நன்றாகப் பார்த்து விட்டு ஒரு பெரிய கத்தியை எடுத்து வந்தான். இதைப் பார்த்தானோ இல்லையோ பயப்பட்டது போல் உடம்பை நெளித்துக் கொடுத்தான். அவன் ஒரு பெரும் கூச்சல் போட்டிருப்பான்! ஆனால் சப்தமே செய்யச் சக்தி இல்லை. உடனே எல்லாம் இருள் மூடியதாக இருந்தது. கண்ணைத்திறக்கவும் தான் பழையபடி அரசகுமாரனாக இருக்கவும் கர்மனுசுடன் அவ்வி

ராக்ஷஸனுடைய கோட்டையில் இருப்பதாகவும் கண்டான். அப்போது அந்த ராக்ஷஸன் "நல்லது!" என்று பரிகாசமாய்ச் சொல்ல அரசகுமாரன், "என்ன நல்லதையா? கர்மனுஸ்! நீ என்ன சிரிக்கிறாய்! எனக்கு அதிகக் கஷ்டமாக இருக்கிறது! நீயோ சிரிக்கிறாய்!" என்று சொன்னான். அதற்கு இராக்ஷஸன் "நீ கஷ்டப்படுவதைப் பார்த்து நான் சிரிக்க வில்லை. ஆனால் கேவலம் பஞ்ஜியை புஜிக்க நீ ஆரம்பிக்கப் போகிறாயென்றல்லவோ சிரித்தது. இது வல்லவோ நாம் சரியான பாதையில் வேலை செய்கிறோமென்று காட்டுகிறது சிறிய அரசகுமாரனே வா! இன்னுமொரு தடவை போய் வரவேண்டும்" என்று ராக்ஷசன் சொல்லி வெகுநேரம் அவனையே பார்த்தான். அரசகுமாரனுக்கு மறுபடி ஒரு மாறுதல் ஏற்படுவதாகத் தோன்றிற்று. தனக்குச் சொந்தமான சிறிய அழகு பொருந்திய வயல் வெளியில் நின்றான். உள்ளே சென்றான். அங்கே அவன் மனைவியும் குழந்தைகளும் அவனுக்காகக் காத்திருந்தார்கள். அவனுடைய சிறு பையன் கூச்சலிட்டுக்கொண்டு தகப்பனைப் பார்த்து தன் இரு கைகளையும் நீட்டினான் மற்றவர்கள் புன்சிரிப்போடும் உல்லாசத்தோடும் நல்வரவு கூறினார்கள். எல்லோரும் போஜனத்திற்கு உட்கார்ந்து சாப்பிட ஆரம்பிக்கவும் யாரோ ஒருவர் கதவைக் கெட்டியாய்த் தட்டினார். யார் என்று வினவினதற்கு "வரி வசூல் செய்கிறவன். கதவைத் திறவுங்கள்" என்ற சத்தம் கேட்டது. உடனே அவன் போய்க் கதவைத் திறந்து "என்னப்பா. நான் எந்தக் காலத்திலும் வரிசெலுத்தினதே இல்லையே! எனக்கு ஒரு சின்னத் தோட்டமும் இரண்டு பசுவும் தானே இருப்பதெல்லாம்" என்று சொன்னான். "இருக்கலாம் அப்பா! ஆனால் அரசகுமாரன் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறான்! அந்தப்படி ஒவ்வொருவரும் தனக்குள்ள சொத்தில் செம்பாதி கொடுக்கவேண்டுமென்று சொல்லவே" அவன் "மீனாக்ஷி ஈசுவரா! என்ன இது! இது சாத்தியப்படாது! அப்படியானால் நாங்கள் வறுமையினால்

சாக வேண்டியது தான். உன் எஜமானனிடம் போய் எங்களுக்கு வரி செலுத்தச் சக்தி இல்லை யென்று சொல்லும்'' என்று கூறினாள். வரி வசூலிக்கிறவன் ''நீங்கள் செலுத்தத்தான் வேண்டு''மென்று இப்படி ஒரு மணி நேரம் போராடிக்கொண்டிருக்கும் போது, இரண்டு சிப்பாய்கள் வந்து அவனுடைய குதிரை, பசுக்கள், ஒரே ஆடு ஆக இருந்த வஸ்துக்களையும் பற்றிகொண்டு போய் விட்டார்கள். அதைப் பார்த்த அரசகுமாரன் ஒரு கல் மாதிரி திகைத்து நின்று விட்டான்.

அவன் மனைவி சின்னக் குழந்தையை மடியில் போட்டுக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். மற்ற இரண்டு பேரும் பயத்தினால் வெறித்த பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெரிய பையனுடைய குதிரை வாலை ஆட்டிக் கொண்டிருந்தது ஒரு தடிப்பையன் இங்கே இன்னொரு குதிரை இருக்கிறதே அதையும் எடுத்துக் கொள்ளென்று சொன்னான். சொல்லவே பெரிய பையன் ''அப்பா நீ எனக்கு கொடுத்ததல்லவா! அது என்னுடைய குதிரை! குரூபமான பயலே! அதை என்னிடம் விட்டு விடு'' என்று அந்த சிப்பாயைப் பார்த்துச் சொன்னான். அப்போது தகப்பன் கண்களில் நீர் ததும்பிற்று. தகப்பன் அரசகுமாரனை இவ்விதக் கஷ்டத்தினால் புத்தி தடுமாறிக் கெட்டியாய் கையை நீட்டிக்கொண்டு சிப்பாயின் பேரில் பாய்ந்தான். சிப்பாயும் கத்தியை உரையிலிருந்து எடுத்து அதனால் ஒரு அடியும் அடித்தான். இந்த சமயத்தில் கர்மனுசன் வந்துசேர்ந்து ''அரசகுமாரனே இது வரையில் எல்லாம் சரியாய் நடந்தேறி வருகிறது! இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது'' என்று ஒரு அழகான அறையைத் திறந்து விட்டு இரண்டு பேருமாகக் கோட்டை முழுவதும் புகுந்து சென்றார்கள். கர்மனுசன் இந்தமுறை அரசகுமாரனிடம் அதிக அன்பும் தயையும் பாராட்டினதினால் அரசகுமாரன் அடிக்கடி ஒரு ஆச்சரியமான பார்வையை அவனிடத்தில் செலுத்திவந்தான். அப்போது ''உனக்கு ஏதாவது இதில்

புரிகிறதா! இல்லையே! என்று கர்மனுசன் கேட்க இல்லை என்று அரசகுமாரன் பதிலுரைத்தான். அப்போது "நல்லது. கவனி! சகல ஜீவன்களிடத்திலும் நான் அன்பு பாராட்டுகிறேன். அப்படியே உன்னிடத்திலும் அன்பாய் இருக்கிறேன். ஆனால் நீ மட்டும் சில வேளைகளில் கொடிய காரியங்களைச் செய்கிறாய். இந்தக் கெட்ட எண்ணத்தை உன்னைவிட்டு நீக்கவேண்டுமென்று தான் என் கருத்து." என்று கர்மனுஸ் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, பேய்கள் ஒரு மேஜையில் ரொம்ப ரமணீயமான ருசியுள்ள ஆகாரத்தை பரப்பிவைத்தன. அந்த போஜனத்தில் மாம்சமாவது மீனாவது இல்லை. குடிப்பதற்கு வைத்தது சுத்தஜலம் பளிங்குக் கண்ணாடிப் பாத்திரங்களில் இருக்கவே, அவைகளுக்கும் உயிர் உண்டாயிருந்தது போலத் தோன்றிற்று. அரசகுமாரனுக்கு இப்படி எத்தனை காலம் சிரமபரிகாரம் செய்து கொண்டானென்பது தெரியாது. எல்லாம் அவனுக்கு ஒரு கனவாக இருந்தது. சிரமபரிகாரமானதும் அந்த ராக்ஷசன் அரசகுமாரனை உற்றுப் பார்த்தான். உடனே அரசகுமாரனுக்கு உடலமெல்லாம் நடுக்க முற்றது. இன்னும் என்ன மாதிரி கஷ்டங்களும் துக்கங்களும் நமக்கு சம்பவிக்கப் போகிறதோ என்று எண்ணினான். என்னதான் ஆகுமோ என்ற ஆச்சரியத்துடன் சுற்றிச் சுற்றி பார்க்கிறான். அப்போது தான் ஒரு ஆண்மனை வாசலில் அரசகுமாரனைப் போல் அல்லாமல் வாசற் காப்பானாக இருப்பதாக்கண்டான். அப்போது அந்த வாசற் காப்பான் ஒரு காலத்தில் தனக்கிருந்த ஒரு பழயகடனைத் தீர்ப்பதற்காக நூறு ரூபாய் கடன் கேட்டான் என்றும் தான் அதற்கு "சாத்தியப்படாது. என்ன சொல்லுகிறாய்? பழயகடனா? தீர்க்கிறதா? நீ ஜாஸ்திச்செட்டாகக் குடித்தனம் செய்யவேண்டும்" என்று சொன்னதெல்லாம் அப்போது அவன் ஞாபகத்துக்கு வந்தது. அபபோது அந்த வாசற் காப்போன் துக்கத்தோடு

வீடுபோய்ச்சேர்ந்தான். இப்போதெப்படியச்சுது? அரசகுமாரனை வாசற் காப்போன் வேலையிலமர்ந்து அதே இடத்தில் இருக்கிறான்! வீட்டுக்குப் போகவே மனைவியும் குழந்தைகளும் அதிகக் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டு இருப்பதை பார்த்தான. அவர்கள் கொடுக்க வேண்டிய கடனுக்காக நூறு ரூபாய் கடன் கொடுத்தவன் "பணம் கொடுத்தாலச்சுது இல்லாவிட்டால் தட்டுமுட்டு சாமான்களை ஏலம்போடுவேன்" என்று பயமுறுத்தி இருக்கிறான். அப்படி செய்து விட்டானேயானல் குழந்தைகளுக்குப் படுக்கக் கூட ஒன்று மில்லை. அப்போது அரசியைப்போய்க் கொஞ்சம் உபகாரம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுங்கள் என்று அவன் மனைவி அழுத குரலுடன் சொன்னுள்! என்ன செய்வான் பாபம்! அரண்மனைக்குப் போய் அரசியிடமும் அணுகினன். அவள் காலில் விழுந்து தனக்கு இந்த ஆபத்தில் உதவிபுரியவேண்டுமென்று மன்றடி கேட்டுக் கொண்டான். அதற்கு அந்த அரசி "உனக்கு என்ன நூறு ரூபாயா தேவை? நல்லதப்பா! இந்தா என்னுடைய சங்கிலியைத் தருகிறேன். அதை விற்று எடுத்துக்கொள" என்றாள். அப்போது அரசியை தண்டனிட்டு நிற்க அவனிருகண்களினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் வடிய ஆரம்பித்தது. தான் அரசகுமாரனக இருந்து செய்த பாவங்களுக் கெல்லாம் துக்கக் கண்ணீராக்கும் இப்போது ஒழுகியது. இப்போது தான் முதல் தடவையாக தன் தாய் எவ்வளவு நல்லவளென்று தெரிந்து கொண்டான். இத்தருவாயில் ஒரு புசற் காற்று மாதிரி அடிக்கவே கர்மனுசன் பெரிய தேகத்தோடு தோன்றும்படி காற்றின் பேரில் ஏறித்தான் வந்தானே வென்று அவர்களுக்கு முன் தோன்றினன். வந்தவன் அரசியைப் பார்த்து "இதோ பார்! இங்கே நிற்பவன் உனது மகன் அல்லவா? அவன் தன் துர்செயல்களை

எல்லாமொழித்து வந்திருப்பாயென்றே நினைக்கிறேன்" என்று சொல்லி மின்னல் போல் மறைந்து போனான். அரசகுமாரனும் நித்திரை தெளிந்தவன் போல் தன புத்தி வரவும தான் தன் தாயின் முன்பாக நிற்பத கக் கண்டான். அரசி தன் மகனிறந்து விட்டானென்றே நினைத்த வளானதால், முதலில் அவன் ஆவிதான் ரூபமெடுத்து வந்ததோ என்று நினைத்தாள். அவன் காணாமற் போய் இப்போது பத்து வருஷமாகிறது. அரசியினுடைய ஆட்சியில் குடிகள் எல்லாம் சுகவாழ்வை பெற்றிருந்தார்கள். அப்போது தன் முன்னிற்கும் உருவத்தைப் பார்த்து "நீ வாஸ்தவத்தில் இந்தஸ்தூல தேகத்தோடு நிற்பது என் மகன் தானா? அல்லது பேயா? என்ற கேள்வியுடன் அவனைக் கூர்மையான பார்வை யுடன் கேட்டாள். அதற்கு "நான் தான் உன்னுடைய அருமைக் குமாரன் அன்பார்ந்த தாயே! நான் உன்னுடைய மகன் தான். நான் செய்த தப்பிதங்களுக்கெல்லாம் இப்போது மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்." என்று அரசகுமாரன் பதிலுரைக்கவே, அரசி "குழந்தாய்! என்னையா மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறாய்! நான் உன்னுடைய தாயல்லவா! நீ எவ்வளவு கெட்ட காரியங்களைச் செய்த காலத்தும் நான் உன்னை அன்பாகவே பாவிப்பேன்." என்று அரசி சொல்லி முத்தமிட்டாள். "ஆனாலப்பா குடிகளுடைய மன்னிப்பை நீ கேட்டுக் கொள்ளவேண்டும்" என்றாள். உடனே அரசகுமாரன் மெத்தையின் சாளரவாசிலில் நின்று கொண்டு குடிகளுக்குச் சொன்னான். தான் பெரிய கர்மனாசன் என்னும் ராக்ஷஸனிடம் அகப்பட்டுக் கொண்டதையும் அதனால் தான் கற்றுக் கொண்ட படிப்பினையையும் பற்றி சொல்லிக் குடிகளுடைய மன்னிப்பையும் கேட்டுக்கொண்டான். தான் செய்த துஷ்கிருத்தியங்களை நினைந்துருகிபரிதபப்பட வதைப்பார்த்த ஜனங்கள் அவனை மன்னித்து இராஜங்கா வேலையில் அமர்ந்து அரசாக்ஷி செய்யும்படி சம்மதித்தார்கள்.

அவன் தாயும் சிலநாளைக்குப்பிறகு இறந்துபோனாள். பிறகு அரசகுமாரனுக்கு விதிப்படி பகுடம் சூட்டப்பட்டு கொஞ்ச நாளைக்கெல்லாம் ஒரு கட்டழகியான சிறு அரசகுமாரத்தியை வதுவை செய்துகொண்டான். ஸ்திரீ புருஷர்கள் இருவரும் சுகவாழ்வடைந்து ஒரு குழந்தை பிறக்கவே அதிக சந்தோஷத்தை யடைந்து சுகவாழ்வு பெற்றார்கள்.

அ. ஹாஷா E. B.

எனது சுவர்ணி மணிகளே!

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்— அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு." என்று [illegible]பனார் அருளியவாறு இந்தக்கதையைக் காதுக்கினிமையான ஒரு மோஹினிக்கதை என்று தள்ளாது, சர்க்கரையில் மதுரமிருப்பது போல இக்கதையில் என்ன தர்மங்கள் அடங்கியிருக்கின்றன வென்று கண்டு அந்தவழி நடக்கமுயல்வீர்களென்று உங்கள் கவனத்துக்குக் கொணர்ந்தேன்.

"முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும்". "வினை விதைக்க வினை விளையும், தினை விதைக்கத் தினை விளையும்". என்கிற வாசகங்களின் அர்த்தங்களை இக்கதை உங்களுக்குப் பாடம் போல் காட்டவில்லையா! நீங்கள் எந்தக் கருமம் செய்யும் போதும் இதை நமக்குப் பிறர் செய்தால் நாம் எப்படி அதை விரும்புவோம். நமக்குத் தீங்கானால் அவர்களுக்கும் நம்முடைய கருமம் தீங்கு தானே விளைவிக்கும். அந்தப்படி தீங்கு செய்ய நமக்கு அதிகாரமுண்டா? நாம் எதிர் பார்ப்பது போல் பிறரும் நன்மையை எதிர் பார்க்க மாட்டாரா? இப்போது நமக்கு பலமிருப்பதாக எண்ணி நாம் நம்மின் மெலியாருக்குக் கெடுதி திருகரணங்களில் எதினாலேனும் செய்தால் சர்வ வல்லமையுள்ள பகவான் நம்மிடம் எப்படி அன்பு பாராட்டுவார்? நாம் செய்த தீவினைப்பயனன்றோ, கடவுள்

அன்புடையவராக இருந்தாலும் அதை புறக்களித்து நம்மை வாட்டும் என்று ஆலோசித்து நம்தாரகைச் சகோதரர்களும் பிரஹ்ம வித்தியாசங்கத்தில் சேர்ந்த சகோதரர்களும் தாங்க ளிவைகளினின்றும் அறிந்த தர்மத்தை முன்னிட்டு மனம், வாக்கு, காயம் ஆகிய கரணங்களாலும் பிறரு க்குத் தீங்கு செய்யாமலும் நாம் எதிர்பார்க்கும் லோக குரு வருங்கால் அவர்வழியில் நின்று அவருக்கு இயைந்த தொண்டர்களாக இருக்குமாறு நீங்களிந்த க்ஷணமுதலே முயல்வீர்களென்று நம்புகிறேன்.

ஓம் தத் சத்.

எஸ். முத்துசாமி ஐயர்

மேற் சொல்லிய கதை 1919ஹூ அக்டோபர் தியாஸ பிஸ்டில் வெளிவந்ததின் மொழி பெயர்ப்பு.

ஓர் புதுமை.

அமெரிக்காவில் நடத்தப்பட்டுவரும் ஒரு வர்த்தமானப் பத்திரிகையிலிருந்தெடுத் தெழுதியதாக ஒரு குழந்தையி னத்தியற்புத வரலாற்றைப் பற்றி காசி ஹிந்து சர்வகலா சாலை மாதாந்தரப் பத்திரிகை கூறுகிறது.

வின்பரெட் சாக்வில்லிஸ்டோனர் என்னும் நாமதேய ங்கொண்ட ஒரு சிறுமியைப் பற்றி ஆச்சரியப்படாதவர் கள் அமெரிக்காவி லில்லையாம். வெர்ஜில் என்னும் ஒரு மகா கவியின் மகா காவியத்தை ஆச்சிறுமி தனது நான்கா வது வயதில் லத்தீனிலிருந்து மொழிப் பெயர்த்தனளாம். லீலாண்டு ஸ்டாண்டு போர்ட் சர்வகலா சாலையில் ஒன்ப தாவது வயதில் வித்தியார்த்தியாகச் சேர்ந்து வித்வகோ

ஷ்டியில் கீர்த்தி பெற்று வருகிறுளாம். (The Young Visitor) என்னும் புத்தக மெழுதிபவரையும் கூட வித்தியா வல்லமையில் தோற்கடித்துப் போடுவாள் என்பதே எங்கும் வதந்தி.

இந்த அத்யத்புதமான சிறுமி குழந்தைப்பருவம் தாண்டி மடந்தைப் பருவ மடைந்து அற்புதமான வனப்பு வாய்ந்து நல்ல தேகக்கட்டுள்ள பதினேழாவது வயதடைந்து இருக்கிறுள். இதுவரையில் பதினேழு புத்தகங்களும் 10,000 (பதினுயிரம்) செய்யுள்களும் எழுதியிருக்கிறுளாம். தான் இரண்டுவயது முதல் ஆரம்பித்து எழுதி வந்த தினசரி வர்த்தமானப் புத்தகம் ஒன்றைப் பிரசுரம் செய்யப் போவதாகவும் வெளியிட்டிருக்கிறுள். அவளுக்கு பதினேழு பாஷைகளில் பேசவருமாம். அநேக வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு வர்த்தமான மெழுதுகிறுள். தவிர, நல்ல பேர்பெற்ற நடியாகவும் உபந்யாசியாகவும் இருக்கிறுளாம்.

இம்மாது ஒரு வயது முதலே அனேகாக்ஷரம் கொண்ட சொற்களையே உபயோகப்படுத்தி நல்ல தெளிவான நடையில் பேசி வருகிறுளாம், இரண்டாவது வயதில் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டாளாம், நான்காம் வயதில் ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதிலே எண்ணங்கொண்டாள், லத்தீன் பாஷையிலிருந்து அநேகக் கிரந்தங்களை மொழி பெயர்த்த தன்றி தான் தரிசித்த இடங்களிலுள்ள விசேஷங்களைப் பற்றி எழுதியிருக்கிறுள். ஐந்தாவது வயதில் பெர்லின் பட்டினத்தில் படித்தவள்.

மாண்ட்ரீல் நியூபார்க் என்னும் பட்டினங்களிலுள்ள வைத்திய சாலைகளை (Hospital) சீர்திருத்தம் செய்வதில் சென்ற இரண்டு வருஷங்களாக முயற்சி எடுத்துக் கொண்டு அங்குள்ள சண்டையிலடிபட்டு வேலைக்கு லாயக்கில்லாது ஊனமாகப் போன வீரர்களுக்கு விளையாட்டுக்

கருவிகள் செய்வதிலும் தேகப்பயிற்சியிலும் பேரதிர்ந்து வந்திருக்கிருள்.

இம்மாது மற்ற ஜாஸ்தி புத்தியுள்ள குழந்தைகளைப் போல குருபியுமல்ல அவள் 5 அடி $7\frac{1}{2}$ அங்குல உயரமும் பத்து ஸ்டோன் பளுவும் உள்ளவள் தேர்ந்த மல்லயுத்தம் செய்யத் தகுந்தவள், சமீபகாலத்தில் சித்திர வியாபாரியின் ஒரு ஏஜண்டோடு போராடி கடைசியாக அவனை பெரிய ஏரியில் தூக்கி எறிந்து விட்டாளாம். மல்ல யுத்தத்தில் அதிகத் தேர்ச்சி அடைந்தவள்.

அற்புதமான குழந்தைகளில் அநேகர் தாங்கள் வயது வந்தவுடன் அதுவரையிலடைந்துள்ள கீர்த்தியை நினைத்து சந்தோஷப்பட்டு அப்பால் சாதாரண ஜனங்களைப் போல இருந்து விடுவதில் இஷ்டப்படுவார்கள். ஆனால் மிஸ் ஸ்டோனர் அந்தவகுப்பில் சேர்ந்தவளல்ல. அவளுக்கின்னும் வித்தியாபி விருத்தியிலேயே ஆசை. அவள் வாரத்திற்கு 25 பவுன் வீதம் ஏற்கனவே வர்த்தமானம் எழுதியனுப்பி சம்பாதித்து வருகிருள். இந்தப்பணத்தை திக்கற்ற யுத்த வீரர்களுக்கு உபயோகப் படுத்துகிருள்.

தான் சீக்கிரம் இல்வாழ்க்கையில் அமர்ந்து ஒரு நல்ல புருஷனை மணந்து அவனிடத்தில் அநேகம் குழந்தைகளைப் பெற்று தானே அக்குழந்தைகளுக்கு படிப்பித்துக் கொடுக்கப் போவதாயும் சொல்லுகிருள். தன் புருஷனை எப்படிக் கைவசப்படுத்திக் கொள்ளக்கூடும் என்பது தனக்கு நன்ருகத் தெரியும் என்றும் சொல்லி ஆசியம் செய்வாள்,

என்னருமைச் சொர்ணமணிகளே இவ்வுத்பாதமும் நாம் எதிர் பார்க்கும் குரு வருகையைப்பற்றி சூசிப்பிக்கிறதுமன்றி ஆறுவது கிளைச்சாதி அமெரிக்கா கண்டத்தில் ஏற்படப் போகிறதென்ற திவ்ய திருஷ்டாக்களின் வசனங்

களுக்கும் அறிகுறியாக இருக்கிறதல்லவ? திரிவிட்ட குறை தொட்டகுறை என்னும் வாசனு சக்தியையும் அனுபவத்திற்குக் கொண்டு வந்து உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்குகிறதல்லவா? இவைகளினுல் பரமன் வருகையிலதிக ஊக்கம் கொண்டு அவர் வந்தாலவரை யறியும் வழிகளாகிய சாந்தம், பக்தி, வைராக்கியம் என்னுமிம் முக்குணங்களையு மின்றே கைப்பிடித்து ஒழுகுவீர்கள் என்று வேண்டுகிறேன்.

எஸ். முத்துசாமி ஐயர்.

சமாசாரக் குறிப்பு.

இராமநாதபுரம் ஜில்லா பிரம்மஞானக் கிளைச்சங்கங்களின் சேர்க்கையின் 2வது மகாநாடு நாளிது ஆகஸ்டுமீ 20, 21, தேதிகளில் ஸ்ரீமான் ஜேம்ஸ் கஸின்ஸ் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. சென்னப்பட்டணம் மாஜி ஹைகோட்டு ஜட்ஜ் திவான் பஹதூர் ஸர். டி. சதாசிவையர் அவர்களும் சகோதரர் எம். சுப்பிரமணிய ஐயர் அவர்களும் அவர்களது பத்தினியார் ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் அவர்களும் அக்கிராஸனாது பத்னியார் ஸ்ரீமதி கஸின்ஸ் அம்மாள் அவர்களும் இன்னும் 20 அங்கத்தினர்களும் ஏழு அனுதாபர்களும் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர். நூறு உள்ளூர்வாசிகளும் கூடினுர்கள்.

கடவுளைப் பிரார்த்தனை செய்து பிறகு சபை ஆரம்பிக்கப்பட்டது. இராமநாதபுரம் கிளைச்சங்கத்தின் காரியதரிசி சகோதரர் ஸ்ரீ. காளஹஸ்தி ஐயர் அவர்கள் எல்லாருக்கும் நல்வரவு கூறினுர். ஸ்ரீமான் ஜேம்ஸ் கஸின்ஸ் அவர்கள் அக்கிராசனத்தை வஹித்ததும், பிரஹ்மஞான சபையானது ஒரு குறிப்பிட்ட தேசமன்னியில்

உலகத்திலுள்ள எல்லா ஜனங்களின் அபிவிருத்திக்காக ஏற்பட்ட தென்பதையும் அதின் மூன்று உயர்வான நோக்கங்களைப் பற்றியும் தெளிவாக உபன்யாஸம் செய்தனர். அப்பால் சகோதரர் கே. எஸ். இராமசந்திர ஐயர் "எண்ணங்களின் சக்தி என்ற விஷயத்தைப்பற்றி படங்களைக்கொண்டு விளக்கிக்காட்டி உபன்யாஸம் செய்தனர். காரியாலோசனைச் சந்திப்பில் (இராமநாதபுரம்) சேர்க்கைக்காரிய தரிசி சகோதரர் எச். சதாசிவையர் அவர்கள் சென்ற மகாநாட்டுக்குப் பிறகு ஷை சேர்க்கையில் நடந்த விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக ஒரு அறிக்கையை வாசித்தனர். அடுத்த வருஷத்துக்கும் அவரையே காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஸர். டி. சதாசிவையர் அவர்கள் சபையோர்கள் கேட்ட பிரசினங்களுக்கு விடை அளித்ததுடன் பாரத சமாஜத்தின் நோக்கங்களையும் விஷயங்களையும் எடுத்து உரைத்தனர். ஜகத்குருவின் வருகையைப்பற்றியும் உபந்நியசித்தனர். சகோதரர் எம். என். இராமசாமி ஐயர் அவர்கள் உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு அது விஷயமாக சிலவார்த்தைகள் சொன்னார்கள். பிறகு ஸ்ரீமான் ஜம்புநாத ஐயர் அவர்கள் (B. A., L. T., F. Z. S. London) ஜீவனானவன் மனிதத்தன்மையை அடைந்தவழியைப்பற்றிச் சித்திர விளக்கத்துடன் உபன்யஸித்தனர். மாதுஸ்ரீ சவிலின்ஸ் அம்மையார் மதத்திற்கு சங்கீதத்தினால் செய்யப்படும் உதவியைப்பற்றித் தெளிவாய் எடுத்துக்கூறினார். அவர்கள் சங்கீதத்தை மூன்று விதமாகப் பிரித்தனர். அவையாவன (1) எவ்விதம் மதத்துக்கு சங்கீதம் உதவி செய்கிறது (2) சங்கீதம் மதத்தை எவ்விதம் வெளிப்படுத்துகிறது (3) சங்கீதம் எவ்விதம் மதத்தின் சக்தியாக அமைகிறது. இந்திய சங்கீதத்தின் தாளம், கீர்த்தனைகள், மிருதங்கம், இவைகளின் உயர்வைப்பற்றி விவரித்துச் சொல்லி உபந்நியாசத்தை முடித்தனர். சகோதரர் அ. ரெங்கசாமி ஐயர் அவர்கள் பி. ஏ, பி. எல் "மனிதன் மூன்று உலகங்களில் சஞ்சாரம் செய்

வதைப்பற்றித் தெரிவித்தனர். சகோதரர் எம். நாராயண சாமி ஐயர் அவர்கள் பி. ஏ. பி. எல். இந்தியக்கல்வியின் உயர்வைப்பற்றிக் கூறினர். அக்கிராசனாதிபதி ஆரம்பத்திலும் முடிவிலும் பேசியதைத்தவிர காண்பரன்ஸின் முதனுளாகிய 19வ கல்வியின் லக்ஷ்பத்தைப்பற்றிப் பேசினர். அன்று இராமநாதபுரம் இராஜா சேதுபதி அவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மேற்கூறிய உபன்யாசங்களில் ஸ்ரீமான் களின்ஸ‌ும் அவர் மனைவியும் ஸ்ரீமான் ஜம்புநாத ஐயரும் ஆங்கிலத்திலும் மற்றவர்கள் தமிழிலும் உபந்யாஸம் செய்தார்கள். இரண்டு நூதன அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள்.

இராமநாதபுரம் கிளைச்சங்கத்தின் மெம்பர்களின் கூட்டம் ஒன்று கூடியது. அதில் ஸர். டி. சதாசிவையர் அவர்கள் அக்கிராசனம் வஹித்தார்கள். சகோதரர் கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் ஷை சங்கத்தின் பிரஸிடெண்டாகவும் சகோதரர் ஸ்ரீகாளஹஸ்தி ஐயர் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப் பெற்றார்கள். ஞாயிற்றுக்கிழமை தோறும் சகோதரர் சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள் கிரஹத்தில் பிர்மஞான சம்பந்தமான புஸ்தகங்கள் படிக்கிறதென்றும் அங்கத்தினர்கள் தீர்மானித்தார்கள்.

அடுத்த மகாநாடு பரமக்குடியில் நடைபெறும்.

மாதுஸ்ரீ சவின்ஸ் அம்மையாரும் ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளும் ஸ்திரீகளுக்கென்று கூட்டம் ஒன்று கூட்டி வைத்தார்கள். அந்தக்கூட்டத்துக்கு சகோதரர் ஸ்ரீகாளஹஸ்தி ஐயர் அவர்களின் பாரியை ஸ்ரீமதி பெரிய நாயகி அம்மாள் அக்கிராசனம் வஹித்தார்கள். அநேகம் ஸ்திரீகள் வந்து பேசினார்கள்.

கே. எஸ். இராமசந்திரையர்.

(56 பக்கம் தொடர்ச்சி.)

விசேஷமாய்ச் சிரத்தையெடுக்கும் அங்கத்தினர் சட்டசபைகளில் அதிகமாவார்கள் அல்லவா? மேலும் குழந்தைகள் பிறந்த முதல் வருஷத்திற்குள் இறந்துபோவது இந்தியாவில் மிகவும் ஸஹஜமாய் விட்டது. ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் 1000 குழந்தைகளில் 51 கைக்குழந்தைகள் இறக்கின்றனவாம். 1000 க்கு 355 கைக்குழந்தைகள் இந்தியாவில் இறக்கின்றனவே. ஸ்திரீகளுக்கு வோட்டுரிமையிருந்தால் தங்கள் பிரதிநிதிகளை இவ்விஷயத்தில் கவனமில்லாமலிருக்க விடமாட்டார்கள். மேலும், தொத்து வியாதிகள் பரவாமலிருக்க வேண்டிய முயற்சிகளைச் செய்யும்படி ஸ்திரீகள் புருஷர்களைவிட கவனமாயிருப்பார்கள்.

***

ஆனால் ஸ்திரீகள் சங்கோசப்பட்டுக்கொண்டு வோட்டுக் கொடுக்க முன்வரமாட்டார்களேயென்று சங்கை ஏற்படலாம். ஆனால் அனுபவமானது வேறு விதமாயிருக்கின்றது. முனிஸிபாலிடிகளில் ஸ்திரீகளுக்கு வோட்டுக்கொடுத்து பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பாக்கியமானது இருக்கிறது. ஸ்ரீரெங்கத்தில் ஸ்திரீகள் வோட் கொடுப்பதற்காக தனியாக இடம் அமைக்கப்பட்டது. பெல்லாரி தஞ்சாவூர் இரண்டு நகரங்களிலும் வோட்டுள்ள ஸ்திரீகளில் 4 ல் 3 பக்சம் வந்து வோட்டு கொடுத்தார்கள். ஆகையால் ஸ்திரீகள் வெளியில் வந்து வோட்டு கொடுக்கமாட்டார்கள் என்று சொல்ல இடமில்லை. ஆயினும் பற்பல நகரங்களில் ஸ்திரீகளில் பெரும்பான்மையோரை நகரவாஸிகளின் வோட்டர் ஜாப்தாவில் சேர்க்கவில்லை யென்பதும், அதை நிவர்த்தி செய்ய ஸ்திரீகளின் சங்கங்கள் முயலவில்லை யென்பதும் வாஸ்தவம். இக்குற்றத்தை இருதிறத்தாரும் கூடிய சீக்கிரத்தில் நீக்கி விடுவார்கள் என்று நம்புகிறோம்.

ஆர். அரங்கசாமி ஐயர்.

மிகவும் அருமையான புஸ்தகங்கள்.

மீனாக்ஷி சுந்தரம்	0—6—0
மாணிக்கவாசகர்	0—8—0
மங்களம்	0—4—0
தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம்	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்	ஷை
கல்வி கற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—9—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன் யாது.	0—9—0
எனது பிரதிஜ்ஞை—ஜினராஜதாசர்	0-12—0
யோக உபந்யாசங்கள்—அன்னிபெஸண்டு	0-12—0

தபால் சார்ஜ் வேறு. பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

எல்லாம் வல்ல ஈசன்.

இப்புத்தகம் பிரஹ்மஸ்ரீ கே. எஸ் இராமசந்திரையரவர்களால் தெளிவான நடையில் சம்பாஷணை ரூபமாய் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் உருவத்தில் சிறியதாகவிருந்தாலும் அதில் அடங்கியிருக்கிற விஷயங்கள் மிகவும் பெருமை வாய்ந்தவைகள். இதில் சர்வேஸ்வரன் எல்லா வஸ்துக்களிடத்திலும் எல்லா பிராணிகளிடத்திலும் இருக்கிறார் என்பதை எளிய நடையில் தக்க உபமானங்களுடனும் உபகதைகளுடனும் தெளிவாக எழுதப்பட்டிருப்பதால் பிரதம பள்ளிகளில் படிக்கும் சிறு மாணாக்கர்கள் முதல் யாவரும் படித்து உயர்வுள்ள உண்மைகளை எளிதில் அறியக்கூடும். [விலை அணா $1\frac{1}{2}$]

சந்தியா வந்தனம்.

இப்புத்தகமும் பிரஹ்மஸ்ரீ கே. எஸ். இராமசந்திரையரவர்களால் சம்பாஷணை ரூபமாய் இயற்றப்பட்டுளது. சந்தியாவந்தன மந்திரத்தின் தாத்பரியம் இன்னதென்று தெரியாமல் நம்மவர்களில் அனேகர் நித்ய கர்மானுஷ்டானமான சந்தியா வந்தனத்தை அனுஷ்டித்துக்கொண்டு வருகிறார்கள். அப்படிக்கில்லாமல் எல்லோருக்கும் அம்மந்திரங்களின் தாத்பரியம் இன்னதென்று விளக்கி விட்டால் சந்தியாவந்தனம் அனுஷ்டானம் செய்வதில் ஜனங்களுக்கு சிரத்தை அதிகப்படுமென்ற நோக்கத்துடன் ஷை தாத்பரியங்களை தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—2—0

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ் மதுரை.

ஜகப் பிரசித்தி பெற்ற
ஜின்டான் மாத்திரை

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம். விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ.,

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள் டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்களை மெழுகு வத்திஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,

ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டு கோ, மேலக்கோபுர வீதி மதுரை.